பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 11 சனிக்கிழமை 27.11.2021 கதிர் 22

### இது ரகசியம் அல்ல!

தெற்கில் பல வீடுகளிலும் குடும்பப் பெண்கள் மத்தியில் பரபரப்பும் பதற்றமுமான ஒரு செய்தி பரவி வருகின்றது. உண்மை, பொய் சரியாகத் தெரியவில்லை.

ஐந்துக்குக் குறையாத வீடுகளில் கடந்த சில நாள்களில் சமையல் எரிவாயு பக்கம்02

# வீரமறவர்களை - காவிய நாயகர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் இன்று!

## தரணியெங்கும் பேரெழுச்சி; தமிழர் தாயகத்தில் கெடுபிடி



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காகத் தமது உயிரை ஈந்த வீரமறவர்களை - காவிய நாயகர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் இன்றாகும். 14

## யாழ்.பல்கலையில் பிரபா பிறந்தநாள்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் 14

## தமிழர்களுக்குச் சாதகமாகவே தோன்றுகின்றது அமெ. இராஜாங்கத் திணைக்கள ருவிட்டர் பதிவு

### தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் அறிக்கை



அமெரிக்க இராஜாங்க திணைக்கள ருவிட்டர் பதிவுகளைப் பார்க்கும்போது தமிழ் மக்கள் மீது யுத்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் நிரந்தர அரசியல் தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டதாகவே எண்ணத்தோன்றுகின்றது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்ட குழு தமது இருதரப்பு கலந்துரையாடலில் கடந்த ஒரு 2

## 'மொட்டு' அரசிலிருந்து மைத்திரி அணி வெளியேறுவதால் பிரச்சினை இல்லை

### இராஜாங்க அமைச்சர் ரொஷான் சபையில் கடுந்தொனியில் பதிலடி



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினால் எமக்குப் பரவாயில்லை. எவ்வித பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரொஷான் 14

## 'மொட்டு'வின் தாய்வீடு சு.கவே!

### துமிந்த தக்க பதிலடி



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தாய் வீடு கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான். எனவே, அக்கட்சியை அழிக்க முடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் சிலருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று சிறிய கட்சியாகத் தெரியலாம். இதுதான் தாய்க்கட்சி 14

✦ மனித உரிமைகளைப் பேணல் ✦ பொறுப்புக் கூறல் ✦ நல்லிணக்கம் ✦ சிறுபான்மையோரின் உரிமைகள்

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் சுமந்திரனுடன் கலந்தாலோசனை





Lord (Tariq)Ahmad of Wimbledon
@tariqahmadbt

It was a pleasure to meet with M.A Sumanthiran today. We discussed upholding human rights, post conflict accountability and reconciliation, as well as the importance of respecting the rights of all minorities @TNAMediaOffice.

பிரிட்டன் தெற்காசிய, ஐ.நா. மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்குப் பொறுப்பான வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவுடன் நேற்றுமுன்தினம் சுமார் ஒரு மணி நேரம் நேரடியாகப் பேச்சு நடத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் 14

## அரச பாடசாலை மாணவர்களுக்கு டிசம்பரில் விசேட விடுமுறைகள்!



அரச பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 23, 24, 25, 26ஆம் திகதிகளில் கிறிஸ்மஸ் விடுமுறை வழங்கப்படவுள்ளது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், டிசம்பர் 27ஆம் திகதி முதல் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் 14

## யாழில் 758 பேர் பாதிப்பு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 216 குடும்பங்களைச் சேர்ந்த 758 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார். 14

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலிண்டர்கள் வெடித்தன என்பதுதான் பீதியைக் கிளப்பியிருக்கும் விடயம்.

எரிவாயுக் கலப்படத்தால் இது நேர்கின்றது என்று அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரை மேற்கோள் காட்டி தெற்கில் ஒரு செய்தி வெளியாகியது. ஆனால் அவரது அலுவலகம் அப்படி ஒரு தகவலைத் தாங்கள் வெளியிட வில்லை எனப் பின்னர் மறுத்துள்ளது.

வீட்டு சமையல் டிப்பார்ட்மெண்ட் அம்மணிகளின் வயிற்றில் புளியைக் கரைக்கும் இந்த விடயத்திற்கும் கோட்டா அரசு மீதுதான் தென்னிலங்கை ஸ்ரீமான் பொதுஜனம் குற்றத்தை அடுக்குகின்றார்.

வருடந்தோறும் உர இறக்குமதிக்கு பல்லாயிரம் கோடி ரூபா அந்நிய செலாவணி தேவைப்படுகின்றது. அப்படிப் பெரு விலை கொடுத்து இறக்குமதி செய்து, இவ்வளவு காலமும் கால் விலைக்கும் அரை விலைக்கும்தான் – மானிய அடிப்படையில்தான் – அந்த உரங்களை விவசாயிகளுக்கு அரசு வழங்கி வந்தது.

இவ்வளவு நிதியை விவசாயத்துக்கு வழங்க முடியாமல் திணறிய கோட்டா அரசு, நல்ல பிள்ளை போல புதுக்கதை விட்டது. இரசாயன உரங்களால் மக்களுக்குப் பாதிப்பு, அதனால் அவற்றைத் தடை செய்கின்றோம் என்று அறிவித்தது.

இந்த முடிவால் இரசாயன உர இறக்குமதிக்குப் பெரும் தொகை அந்நிய செலாவணியை செலவிடவும் தேவையில்லை, மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு அவற்றை வழங்கி அரசு கையைச் சுட்டுக் கொள்ளவும் தேவையில்லை எனத் திட்டமிட்டது அரசு.

அதன்படி காரியங்கள் நடந்தேறின. இப்போது விவசாயிகளின் கடும் எதிர்பால் இரசாயன உர இறக்குமதிக்கு அரசு அனுமதி வழங்கினாலும், அதை இறக்குமதி செய்யும் வேலையும் தன்னுடையது அல்ல, மானிய உதவியும் கிடையாது என அரசு தெரிவித்து விட்டது.

இனி உரத்தை இறக்குமதி செய்ய முயலும் தனியார் துறையினர்தான் அதற்கான அந்நிய செலாவணியையும் தேட வேண்டும் அல்லது அது கிட்டும் வரைக் காத்திருக்க வேண்டும்.

நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உர விவகாரத்தில் நல்ல பிள்ளை வேஷம் போட்டு, இரசாயன உரப் பாதிப்பிலிருந்து நாட்டைக் காப்பது போல படம் காட்டிய மாதிரித்தான், இப்போது எரிவாயு கொள்கலன் (காஸ் சிலிண்டர்) விவகாரத்திலும் அரசு கயிறு விடுவதாக தென்னிலங்கை ஸ்ரீமான் பொதுஜனம் பேசிக் கொள்கின்றார்.

“எரிவாயுக் கொள்வனவுக்கும் அந்நிய செலாவணி கடிப்பதுதான் சிக்கல். இப்படிப் பத்து இடத்தில் காஸ் சிலிண்டர்கள் வெடித்தால் மக்கள் காஸ் சிலிண்டர் பாவனையை விடுத்து, பழையபடி விறகு அடுப்புப் பாவிப்புக்கும் திரும்பி விடுவார்கள் என்று அரசு கணக்குப் போடுகின்றதாம். அதனால்தான் முன்னெப்போதும் இல்லாதவாறு இப்போது காஸ் சிலிண்டர் வெடிப்புகள் தொடங்கியுள்ளன” – என்று தெற்கில் ஒரு வீட்டுக்கார அம்மா கூறுகின்றார்.

செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது’ என்பார்கள். அது போல இப்போது நாட்டில் நடக்கும் நல்லவை,கெட்டவை எல்லாவற்றுக்கும் பழி பாவம் நாட்டின் அதி உத்தமர் மீதுதான்...!

காஸ் சிலிண்டர்கள் வெடிப்பதற்கும் அவர் தலை உருளுவது தவிர்க்க முடியாததுதான்...!

★ ★ ★

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் நாடுகளுக்கான அரசியல் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அடுத்த வார முற்பகுதியில் நாடு திரும்புகின்றார் சுமந்திரன்.

இந்தப் பயணம் தமிழர் தரப்புக்கு புதிய நம்பிக்கையைத் தந்திருப்பதாக அவர் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருக்கின்றார்.

பொறுப்புக் கூறல், இழப்பீடுகளை வழங்குதல் என்ற பாணியில் கடந்த பத்து வருடங்களாக இலங்கை விடயத்தைக் கையாண்டு வந்த அமெரிக்கா, இனிமேல் இந்தியாவுடன் சேர்ந்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதில் மிகத் துரிதமாக – அர்த்தமுள்ள வகையில் – பங்களிப்பதற்கான சூழல் கனிந்து வருவதாக அமெரிக்கத் தரப்புடன் ஊடாட்டம் நடத்திய சுமந்திரன் குழு கருதுகின்றது.

அமெரிக்க உயர்மட்டத்துடன் நடத்திய பேச்சுகளின் போது அங்கிருந்து கிடைத்த பிரதிபலிப்புகள் சுமந்திரன் அணியை புளகாங்கிதம் அடைய வைத்திருக்கின்றதாம்.

அதன் விளைவுகளை – பிரதிபலிப்புகளை – அடுத்த ஆண்டு முற்பகுதியில் காணக் கூடியதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழர் தரப்பின் பேச்சுக் குழுவில் இருந்ததாகத் தெரிகின்றது.

இந்தியாவைப் பதற்றமடையச் செய்யாமல், இந்தியாவையும் பங்காளிகள் போல இணங்கி, இசைந்து போகக் கூடிய விதத்தில், அமெரிக்கப் பேச்சுகளையும் கலந்துரையாடல்களையும் முன்னெடுக்க முடிந்தமை தங்களின் நுணுக்கமான அரசியல் நகர்வுகளுக்குக் கிடைத்த வெற்றி என்று சுமந்திரன் குழு கருதுகின்றது.

நியூயோர்க்கிலும், வொஷிங்டனிலும் நடந்த சந்திப்புகள், கலந்தாய்வுகளின் பெறுபேறுகள் குறித்து அங்கங்கிருந்தபடியே புதுடில்லிக்கும் சுமந்திரன் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார் என்றும் தெரிகின்றது.

வொஷிங்டனில், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து மூலமும் (முன்னர் கொழும்பில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றியவர்), நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திருமூர்த்தி மூலமும் அமெரிக்காவில் நடைபெறும் பேச்சுக்கள், தங்கள் கலந்துரையாடல்களின் பெறுபேறுகள் போன்றவற்றை இந்தியத் தரப்புக்கு – புதுடில்லிக்கு – அவ்வப்போது அஞ்சல் செய்து, அதன் மூலம் புதிய சமாதான முயற்சித் தட்டிலே அமெரிக்காவுடன் இந்தியாவையும் அரவணைத்து வைத்துக் கொண்டது சுமந்திரனின் இராஜதந்திரம்.

லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் நேரம் ஒதுக்கி, தம்மை அழைத்து, நீண்ட கலந்துரையாடலை விவரமாக நடத்தியமை குறித்து சுமந்திரன் குழு முழுத் திருப்தி தெரிவித்தது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணைகள், விடயங்கள் மற்றும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் அம்சங்களைத் தொடர்ந்தும் பிரிட்டனே தலைமை வகுத்து முன்னெடுக்க வேண்டும் என்ற சுமந்திரனின் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் சாதகமாக பிரதிபலிப்பைக் காட்டினார் என சுமந்திரன் கூறுகின்றார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவையும், அமெரிக்காவையும் ஒரே பக்கத்தில் ஒன்றுபட்டுச் செயற்பட வைக்கும் இராஜதந்திரம் வெற்றியளிக்குமானால், தமிழர் தரப்பில் சிறிது தெம்பும், நம்பிக்கையும் பிறக்கும் என்பது கண்கூடு.

கொழும்பு திரும்பியதும் இவை பற்றிய மேலதிக விவரங்களை சுமந்திரன் வெளியிடுவார் என எதிர்பார்க்க முடியும்.

– மின்னல் –

---

## தமிழர்களுக்குச் சாதக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாரகாலமாக ஈடுபட்டு வருகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்ட இருதரப்பினரும் கலந்துரையாடல் தொடர்பான விடயங்களை வெளிப்படையாக இதுவரை கூறவில்லை.

இருந்தபோதிலும் அமெரிக்க இராஜாங்க திணைக்கள ருவிட்டர் பதிவுகளை பார்க்கும்போது தமிழ் மக்கள் மீது யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் நிரந்தர அரசியல் தீர்விற்கான அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகள் கடந்த நிலையில், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் உருப்படியான, உறுதியான எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்பது இவ்வேளையில் நோக்கப்பட வேண்டும்.

நல்லாட்சி அரசு என்று சொல்லப்பட்ட அரசாங்கத்தின் காலத்தில் கூட எடுக்கப்பட்ட சில முன்னேற்றகரமான செயற்றிட்டங்கள் முழுமை பெறவில்லை.

புதிய ஜனாதிபதி தேர்வும் அதனை தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசும் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் தமது சிங்கள, பௌத்த மேலாதிக்க வாதத்தையே தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் அவை எல்லாவற்றிற்கும் மேலாக எண்ணிகையில் சிறுபான்மையாக இருக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் தமது இருப்பு தொடர்பான பிரச்சினைகளிற்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழலில்தான் எமது விடயம் ஒரு சர்வதேச விவகாரமாக, குறிப்பாக 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாறியதும் அவ்வப்போது பேசுபொருளாவதும் நாமறிந்ததே.

அண்மைய பூகோள அரசியல் மாற்றங்கள், அவற்றால் ஏற்படும் சர்வதேச தலையீடுகளால் எமக்கு விமோசனத்திற்கான வழி பிறக்குமா என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் மேலோங்கியுள்ளது.

எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் அண்மைய அமெரிக்க விஜயம் இலங்கையில் வாழும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இருந்தபோதும் வழமையைப்போல இப்பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானதாக அமையுமா என்ற ஐயம் எம்மத்தியில் உண்டு.

அமெரிக்காவுக்குச் சென்ற சுமந்திரன் குழுவினர் பேச்சுக்களில் ஈடுபட்டதோடு சுமந்திரன் கனடாவுக்கான தனது விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் சேர்ந்துகொண்டார். அவர்கள் இருவரும் கனடா மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கும் உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொள்ளுகின்றனர்.

அமெரிக்க பயணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எனக்கு புலம்பெயர் நண்பர் ஒருவர் ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். அதில் ‘பைடனுக்கான தமிழர் அமைப்பு’ என குறிப்பிட்டவர்கள் சுமந்திரன் குழுவினரின் அமெரிக்க விஜயத்திற்கான அழைப்பை இராஜாங்கத் திணைக்களம் விடவில்லை என்றும் சில அமைப்புக்களே அழைத்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. சரி யார் அழைத்திருந்தாலும் எமக்கு ஒரு நண்மை நடக்குமானால் அதை நான் வரவேற்பேன் எனக் கூறினேன்.

இங்கு நான் குறிப்பிட விரும்பும் விடயம் என்னவெனில் சில கட்சிகளிற்கும் அமைப்புகளிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை என்பவற்றை அமெரிக்கா அழைத்ததை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்படி அழைத்ததானது அமெரிக்கா தமிழர்களின் பிரதிநிதிகளாக தமிழ் தேசிய கூட்டமைப் பையும் உலகத் தமிழர் பேரவையையும் ஏற்றுக்கொண்டதாகிவிடும் என்ற எண்ணத்தை தோற்றுவித்துவிடும் என எண்ணியிருக்கலாம்.

எனவேதான் சில அமைப்புக்களின் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகள் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகிய இருவருக்கும் எதிராக சிலர் ஏற்பாடு செய்து நடந்த சம்பவங்களிற்கான ஆதரவை தமது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டும் மற்றவர்களிற்கு பகிர்ந்தும் கொண்டார்கள்.

பல கருத்துக்களை கொண்டவர்கள் அல்லது வெளிவேறு அரசியல் சித்தாந்தங்கள் கொண்டவர்கள் ஒன்றாக வாழக் கூடிய ஜனநாயக அமைப்பில் தமது கருத்துக்களை சுதந்திரமாகவும் தடையின்றியும் வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் அனைவருக்கும் உள்ளது.

இலங்கையில் அவ்வாறான நிலை இல்லாதபோதும் ஜனநாயக விழுமியங்களை பேணுகின்ற நாடுகளில் கருத்து சுதந்திரம் தாராளமாகவே உள்ளது.

இவ்வாறாக தமது கருத்துக்களை சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் அமைதியாகவும் நாகரிகமாகவும் வெளிப்படுத்தக்கூடிய சூழல் இருந்தும் மிக அநாகரீகமான சொல் பிரயோகங்களை பயன்படுத்தியும் தனிப்பட்ட வகையில் ஒரு தனி மனிதனை இலக்கு வைத்தும் அவமானப்படுத்தும் வகையில் அமைதியின்மையை ஏற்படுத்தியது ஏற்றுக்கொள்ள முடியாததும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

சுமந்திரன் வருகையை நாகரிகமாக எதிர்த்திருக்கலாம் அல்லது அங்கு நடந்த கூட்டத்தில் தமது சந்தேகங்களை அல்லது சுமந்திரன் மீதான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்கலாம். அதனை விடுத்து மற்றவர்களின் தனிமனித சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படுத்தி, அநாகரிகமாக நடந்துகொண்டதை ஆரோக்கியமான அரசியல் செய்ய முற்படும் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சுமந்திரனுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய சம்பவம் கட்சி பேதங்களிற்கு அப்பால் எவருக்கும் ஏற்படக்கூடாது – என்றுள்ளது.

---

# நேற்று 714 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்று 714 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 61 ஆயிரத்து 59 ஆக எகிறியுள்ளது.

அவர்களில் 18 ஆயிரத்து 21 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 406 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 28 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

# 26 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 26 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 26 சாவுகளில் 10 பெண்களும், 16 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 258 ஆக அதிகரித்துள்ளது.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

வறுமையும், வன்முறையும் பெரிதும் தாக்குவது பெண்களையே. வறுமை ஒழிப்போம்! வன்முறை தடுப்போம்! சமத்துவமான சமுதாயத்திற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.!”

JSAC
16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்



## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்க-ளிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடன-டியாகவே பொ ருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

**யாழ்ப்பாணம்**

**28/11/2021 | 9.00 a.m -12.00 a.m**

**திவ்ய மஹால்**

**1001, K.K.S Road, Vannarpannai, Jaffna**

**இந்நிகழ்வில் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது**

600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 25 னை
இந்நிகழ்வில் பெற்றுக்கொள்ளலாம்



**அருந்ததி பிரைவட் லிமிடட்**

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

**www.arunthathee.com | +94 777 164 524**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஈகத்தின் இமயங்கள்

இன்று மாவீரர்கள் நாள்.

தம் இனத்துக்காகத் தங்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களை தமிழர்கள் ஒன்று சேர்ந்து நினைவேந்தும் நாள் இது.

இன வன்முறைகளினாலும், அடக்குமுறைகளினாலும், கோர யுத்தத்தினாலும், பேரழிவுகளையும் இழப்புகளையும், துயரங்களையும் சந்தித்து நிற்கும் தமிழினத்துக்கு இழப்புகள் தொடர்பில் நினைவேந்தல் மேற்கொண்டு மனதை ஆற்றுப்படுத்தும் உரிமை இருக்கின்றது. சர்வதேச அளவில் அடிப்படை மனித உரிமையாக மதிக்கப்படுவது இது. அதுவும் பேரிழப்பைச் சந்தித்த ஒரு சமூகம் அந்தத் துன்ப, துயரங்களில் இருந்து மீண்டெழுவதற்கும், தன்னை மீள உயிர்ப்பித்துக் கொள்வதற்கும் இந்தக் கூட்டு நினைவேந்தல் மிக முக்கிய – அடிப்படை – மார்க்கமாகக் கருதப்படுகின்றது.

தமிழினத்தை அடக்கி, ஒடுக்கி, இந்த இலங்கைத் தீவில் அதன் தனித்துவத்தையும் வரலாற்று உரித்தையும் சின்னாபின்னமாக்கி, நாசமாக்குவதில் கங்கணம் கட்டி நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதம், யுத்தத்தின் மூலம் – யுத்தக் குற்றங்களின் மூலம் – அடிப்படை மனித உரிமை மீறல்கள் மூலம் – மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் மூலம் – தான் தமிழினத்துக்கு இழைத்த அடாவடித்தனத்துக்கு மேல், அந்த இழப்புகளில் இருந்து தமிழினம் மீளுவதற்கான நினைவேந்தலுக்கும் இடமளிப்பதில்லை என்று கறுவிக் கொண்டு நிற்கின்றது.

அதன் வெளிப்பாடுதான் இன்றைய நினைவேந்தலுக்கு எதிராக ஆட்சியாளர்களினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடூர அடக்குமுறையாகும். முப்படைகளையும் பொலிஸையும் தமிழ் மக்கள் மீது ஏவி விட்டு, அந்த ஆற்றுப்படுத்தல் நடவடிக்கையையும் – நினைவேந்தல் செயற்பாட்டையும் – தடுப்பதை தனது அடக்குமுறை அங்கமாக முன்னெடுக்கின்றது பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடம்.

இந்த நீதி, நியாயமற்ற – தார்மீக நெறிமுறைகளை மீறிய – அடாத்து நடவடிக்கைகளுக்கு தனது ஏவல் படைகளை மட்டுமல்லாமல், நீதித்துறையையும் கூட பேரினவாதம் இதுவரை காலமும் பயன்படுத்தத் தவறவில்லை.

ஆனால், இலங்கையின் நீதித்துறையில் செயற்படும் சுயாதீன சிந்தனையாளர்களும், தனித்துவமான பண்பியல்பும், சுய தெளிவும் கொண்ட நீதியாளர்களும் சுதாகரித்துக் கொண்டு, நீதி முறைமையான உத்தரவுகளை வழங்கத் தொடங்கி விட்டனர்.

தடை செய்யப்பட்ட அமைப்புகளின் கொடிகள், அடையாளங்கள், பெயர்களைத் தவிர்த்து, மறைந்த தமது உறவுகள், உற்றார்களை மக்கள் தனித்தும் சேர்ந்தும் நினைவு கூர்வதைத் தடுக்க முடியாது என்ற தெளிவான – உறுதியான – சட்ட ரீதியான – நியாயமான – முடிவை எடுத்து, அதன்படி வழிகாட்டல்களை வழங்கியிருக்கும் நீதியாளர்களின் துணிச்சல் பாராட்டத்தக்கது.

ஈடு இணையற்ற ஈகங்களை இயற்றி, ஒப்புயர்வற்ற தியாகங்களைப் புரிந்து, எல்லை கடந்த வல்லமைகளைக் காட்டி, அளவற்ற அர்ப்பணிப்புகளை ஆற்றி, உலகை அதிர வைக்கும் அற்புதத் துணிச்சலை வெளிப்படுத்தி, தமது இனத்தின் சார்பில் தம்முயிரைக் கொடையாகத் தந்த அந்த அதிசய ஆன்மாக்களை அமைப்புக் கடந்து தமிழினம் தமது வழிகாட்டிகளாக வணங்கி நிற்கின்றது. அவர்களைத் துதிப்பதற்கு கொடி, குடை, ஆலவட்டம், சின்னம் எல்லாம் தேவையில்லை.

இனத்தின் இருப்புக்காக தமது சுயத்தைத் தொலைத்த அந்த உத்தம புத்திரர்களை தமிழ் மண் இன்று அளவற்ற வாஞ்சையோடும், துயரத்தோடும் நினைவேந்தல் செய்கின்றது.

காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலம் எல்லாம் கலந்து நிற்கும் உன்னத மனிதர்கள் அவர்கள். தம் இருப்பு நிலையற்றது என்பதை உணர்ந்து, தம் இனத்தின் இருப்புக்காகத் தங்களைத் தொலைத்த தியாகிகள் அவர்கள். அவர்கள் நினைவு என்றும் தமிழினத்தின் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து நிற்கும்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி சத்திர சிகிச்சை தொகுதி



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து சுமார் 3 கோடியே 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கி வைக்கப்பட்ட அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி சத்திர சிகிச்சை தொகுதி அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) வைத்தியசாலையில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பொது சத்திர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மௌ.மதுரகீதன் தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் செந்தில் நந்தனன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்தியர்த.விநோதன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் க.செந்தூர் பதிராஜா ஆகியோர் இணைந்து வைபவரீதியாக பொது சத்திர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் மௌ.மதுரகீதன், மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் எ.புஸ்பகாந்தன் மற்றும் சத்திர சிகிச்சை கூட பொறுப்பு தாதியர் க.யாழினி ஆகியோரிடம் நோயாளர் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி சத்திர சிகிச்சை முறை வயிற்றை வெட்டி திறக்காமல் சிறு துளைகளினூடாக கமரா மற்றும் கருவிகளையும் உட்செலுத்தி சத்திரசிகிச்சை செய்யும் ஒரு வசதியாகும்.

இந்த முறைமையில் சத்திரசிகிச்சை செய்யும்போது ஏற்படும் காயம் மற்றும் வலி என்பன மிகப் குறைவாகவே காணப்படும்.

மிகவும் பெறுமதி வாய்ந்த அதிநவீன முப்பரிமாண லபரோஸ்கோபி வசதி இலங்கையின் ஒரு சில வைத்தியசாலைகளில் மாத்திரமே காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் இந்த நவீன முப்பரிமாண சத்திர சிகிச்சை தொகுதி முதன்முதலாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சத்திர சிகிச்சை வசதி பொது சத்திர சிகிச்சை, புற்றுநோய்,பெண் நோயியல் மற்றும் குழந்தை பேறின்மை தொடர்பான நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ஏனைய பெரும்பாலான வைத்தியசாலைகளில் இல்லாத அதி நவீன மொடியூலர் சத்திரசிகிச்சை கூடம் மற்றும் நவீன நகர்த்திப் பாவிக்கும் எக்ரே இயந்திரம் என்பனவும் வடக்கு கிழக்கு வைத்தியசாலைகளில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாத்திரமே முதன்முதலாக கிடைக்கப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் வில்காமம் பகுதியில் புதையல் தோண்டிய 11 பேர் கைது

அம்பாறை–திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள வில்காமம் மலைப் பிரதேசத்தில் புதையல் தோண்டலில் ஈடுபட்ட சந்தேகநபர் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில், புதையல் தோண்டலுக்காக சந்தேகநபர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளோம் என திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பிரதேசத்திலுள்ள மலையில் கல்லுடைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்ற நிலையில், சம்பவதினமான வியாழன் இரவு மலைக்கு அருகில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஒரு குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கயை அப்பகுதியை பொலிஸார் முற்றுகையிட்டபோது, அங்கு புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தம்பிலுவில் மற்றும் திருக்கோவிலைச் சேர்ந்த 11 பேர் கொண்ட குழுவினரை மடக்கிப்பிடித்து கைது செய்துள்ளனர். மேலும் அலவாங்கு, மண்வெட்டி மற்றும் புதையல் தோண்டுவதற்கான உபகரணங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2021

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது பாட்டன் நட்ட பலாமரம் பூக்கிறது வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய் மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"

- புதுவை இரத்தினதுரை (கவிஞர்)



# நினைவுகூரும் உரிமையைத் தடுப்பது தவறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தது எதிர்க்கட்சி

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதென்பது உலக நடைமுறை. அதில் எவ்விதத் தவறும் கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மட்டுமன்றி 2005 இல் வந்த அரசாங்கம், 2010 இல் வந்த அரசாங்கம் என அனைத்து அரசாங்கங்களும், சர்வதேசத்துடன் பகைமையையே வளர்த்துக் கொண்டன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியில் எமது நாட்டுக்கு எதிராக மூன்று பிரேரணைகள் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டன.

2015இல் அவர் ஜனாதிபதியாக இருந்திருந்தால், நாம் பொருளாதாரத் தடைக்கு முகம் கொடுத்திருப்போம். இதனால்தான் அவர் இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே, அன்று ஜனாதிபதித் தேர்தலை வைத்தார்.

பின்னர் நாம் ஆட்சிக்கு வந்தவுடன், மஹிந்த ராஜபக்ஷவையும் காப்பாற்றிக் கொண்டே நான்கரை வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தோம். சர்வதேசத்துடனும் ஒன்றித்துப் பயணித்தோம்.

இன்று மீட்டும் இந்த அரசாங்கம் பழைய போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. சர்வதேசம் இன்று மீண்டும் எமது நாடு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இதில் பிரதானமாக நாட்டின் சிவில் நிர்வாகம் இராணுவத்தின் கைகளில் செல்வதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனத்தன்மையை இழந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது 19 ஐ இல்லாதொழித்து 20 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்தமையால் இந்த விளைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கம் அக்கறை செலுத்துவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத ரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாம் ஆட்சியில் இருந்த காலத்தில் தேசியக் கீதத்தைக் கூட தமிழில் இசைத்தோம். இதனாலேயே நாம் சர்வதேசத்தால் பாராட்டப்பட்டோம். சிறுபான்மையினருக்கு எதிராகச் செயற்படும் ஓர் அரசாங்கத்துக்கு எந்தக் காரணம் கொண்டும் சர்வதேசத்தின் ஆதரவு கிடைக்காது என்பதை இந்த அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்தோடு, ஊடக சுதந்திரமும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், யுத்தத்தின்போது இறந்தவர்களை நினைவு கூரவும் தடை செய்யப்பட்டுள்ளமைக்கும் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களாகும். இதற்கெல்லாம் அரசாங்கம் பதில் கூறியே ஆகவேண்டும்.

அதேநேரம் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாகவும் சர்வதேசம் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அவர்களின் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவையாகவே காணப்படுகின்றன.

அரசாங்கத்தால் இவற்றை நிறைவேற்ற முடியும். இதுதொடர்பாக அரசாங்கம் திருத்தங்களையேனும் கொண்டுவந்தால் நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம். - எனத் தெரிவித்துள்ளார்.

## ஐவரடங்கிய நீதியரசர்கள் ஆயத்தின் முன் யுகதனவிக்கு எதிரான மனு பரிசீலனைக்கு

யுகதனவி மின்நிலைய ஒப்பந்தத்துக்கு எதிரான மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி பிரதம நீதியரசர் தலைமையிலான ஐவரடங்கிய ஆயத்தின் முன்னிலையில் குறித்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித், ஐக்கிய மக்கள் சக்தியினர், மக்கள் விடுதலை முன்னணியினர் உட்பட பல பிரிவினர் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தாக்க அரங்கத்தின் அரங்கக் கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல் 52 ஆவது நிகழ்வு 28.11.2021ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யா/மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய நாடகத்துறை ஆசிரியர் க.கஜேந்திரன் 'ஈழத்து இசை நாடக ஆளுமைகளில் சரவணமுத்து அவர்கள் பற்றிய நோக்கு' என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள். இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348 261.

கடவுச்சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் உள்ளிட்ட 17 பேர் தனிமைப்படுத்தலில்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பருத்தித்துறை நகரசபை தவிசாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட 17 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பருத்தித்துறை நகரசபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டு அமர்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை நகர சபை தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக 17 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பருத்தித்துறை நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு இடம்பெற்ற வேளை அங்கு கலந்துகொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த அமர்வில் கலந்து கொண்ட 14 உறுப்பினர்களுடன் ஒரு தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஓர் எழுதுநர் ஆகியோர் கடந்த புதன்கிழமை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த தனிமைப்படுத்தலை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கேள்விஅறிவித்தல்
## யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர் பணிமனையில் 15.12.2021 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உணவகத்தின் பெயர் | அமைவிடம் |
|---|---|
| பிரதானஉணவகம் - I | திருநெல்வேலி |
| பிரதானஉணவகம் - II | திருநெல்வேலி |
| முகாமைத்துவகற்கைகள் மற்றும் வணிகபீடஉணவகம் | கலாசாலைவீதி,திருநெல்வேலி. |
| மருத்துவபீடஉணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவமாணவர் விடுதிஉணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமிமாணவர் விடுதிஉணவகம் | திருநெல்வேலி |
| சித்தமருத்துவ அலகுஉணவகம் | கைதடி |


மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/=இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் **9700000 60000268** இற்கும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் **9700000 60000276** இற்கும் தனித்தனியாக செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக மேற்காட்டப்பட்டபடி குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்**
**26.11.2021**

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

# நாவலர் பணிக்கு பெருமை சேர்க்க அவரின் வழி நின்று உழைப்போம்!

ஸ்ரீ. நதிபரன் - நல்லூர்



தமிழ்க்குலம் உலகப் புகழெய்தத் தாழாதுஞற்றுங்கள், அஃது ஒன்றே எனக்கு தமிழினம் செய்யும் மிகப்பெரும் கைமாறாகும் என்பது இற்றைக்கு ஏறக்குறைய ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஈழம் தந்த ஆறுமுக நாவலர் பெருமான் கூறிச்சென்ற மெய்க்கூற்றாக அமைகிறது.

இது அரசியல்வாதிகளிடமிருந்து பிறக்கும் வெற்றுரையைப் போல வெறுமனே அவர் வாயிலிருந்து எழுமாறாக வந்துதித்ததல்ல. அவரது இதயப்பரப்பெல்லாம் இழையோடி ஆழ வேரோடியுள்ள மதம் - மொழி மீதிருந்த ஆழமான பற்றுதலின் –வேணவாவின் - வெளிப்பாடே அது.

தமிழ் மொழியும் சைவசமயமும் – இவையிரண்டுமே என்னிரு கண்கள். இவற்றை ஒளி குன்றாது பாதுகாப்பதே என்முன் விரிந்திருக்கும் பணியாகும். அதுவே எனது வாழ்வின் குறிக்கோளுமாகும். ஏன்ற தனது பணிக்கூற்றுக்கு ஒப்ப தன் வாழ்வியலைக் கட்டமைத்து வாழ்ந்த கர்மவீரர் அவர்.

நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே என பண்டித மணி கணபதிப்பிள்ளை அவர்கள் ஓர் இடத்தில் நாவலரை விதந்துரைத்திருக்கின்றமை குறிப்பிடற்பாலது. இவரைப் பற்றிய சிறிய முன்னோட்டத்துடன் விடயத்துக்குள் நுழைவோம்.

சைவமும் தமிழும் சிறப்புற்றிலங்கிய யாழ்ப்பாண நன்நகரில் அதன் இதய பூமியாக விளங்கும் நல்லைமாநகரில் 1822 டிசம்பர் 18 இல் கந்தப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகள் செய்த அருந்தவப்பேற்றால் நிகழ்ந்த அற்புதம் நிறைந்த உற்பவமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் வந்துதித்தார். பெற்றோர் அவருக்கிட்ட நாமம் ஆறுமுகம்பிள்ளை. பின்நாளில் அவரது ஆழ்ந்த கல்விப் புலமையை முன்நிறுத்தியும் அவராற்றிய சைவத் தமிழ்ப் பணிகளை கௌரவித்தும் அவருடன் இயல்பாகவே இருந்த நாவன்மையை சிறப்பித்தும் 1865 இல் மதுரை திருவாவடுதுறை ஆதீனமானது நாவலர் என்ற மதிப்பார்ந்த அதிசிறப்புப் பட்டத்தை வழங்கியமையால் எல்லோரும் ஆறுமுக நாவலர் என்றே அழைக்கலாயினர்.

ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்யப்பட்ட இவர் தமது இளமைப் பருவத்தில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப்புலவர் ஆகியோரிடம் குருகுல முறைப்படி தமிழ் மொழியையும் சைவசமய சாத்திரங்களையும் பயின்றமையுடன் கூடவே வட மொழியையும் துறைபோகக் கற்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்த மிசன் கல்லூரியில் (இக்கால யாழ்.மத்திய கல்லூரி) ஆங்கில மொழியைக் கற்றதுடன் அக்கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகவும் கடமை புரிந்தார்.

1841ஆம் ஆண்டில் ஆசிரியப் பணிசெய்ய ஆரம்பிக்கையில் அவருக்கு வயது 19. இவரது கல்விப்புலமையை - ஆங்கில மொழி அறிவை அவதானித்த அவ்வேளையில் அப்பாடசாலையின் அதிபராக இருந்த பேர்சிவல் பாதிரியார், ஆங்கிலத்திலுள்ள கிறிஸ்தவ விவிலிய நூலை தமிழில் மொழி பெயர்க்கும் வேலையை ஒப்படைத்தார். அவ்வேலையை சிறந்த முறையில் செய்து அவரின் பாராட்டையும் பெற்றார்.

காலத்தின் அசைவினால் அவரது வாழ்க்கைப் பயணம் சமயப் பணி நோக்கி திருப்பப்படுகிறது. இதனால் தமக்குக் கிடைத்த உத்தியோகத்தையும் ஏனைய வாய்ப்பு, வசதிகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு சைவ மக்களின் நல்வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்தார்.

பகவத் கீதையிலே கிருஷ்ண பரமாத்மாவால் அருச்சுனனுக்கு கூறிய உபதேசத்தில் உலகில் அதர்மம் மேலோங்கி தர்மத்திற்கு அழிவு ஏற்படும் போது நான் என்னை விளக்குகிறேன். நல்லோரை காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகம் தோறும் அவதாரம் புரிகின்றேன். என குறிப்பிடுவதாக பகவத் கீதை இயம்புகிறது. நாவலரின் பெருமை பேசுகின்ற இவ்விடத்தில் ஏனிந்தப் பீடிகை? இரண்டிற்குமிடையே என்ன சம்பந்தம்? எனக்கேட்பின் சம்பந்தமிருக்கிறது. இவர் அவதரித்த காலப்பகுதி, சைவமும் தமிழும் நலிவுற்று மக்களின் வாழ்வை இருள் சூழ்ந்திருந்த நேரமது. இலங்கைக்கு வர்த்தக நோக்குடன் வந்த அந்நியரின் ஆட்சியில் நம் தேசம் கட்டுண்டு கிடந்த நேரத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும் ஈழத்தமிழ் மக்களின் உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர்விட்டிலங்கும் சைவசமயமும் அவர்களது தாய்மொழியான தமிழ்மொழியும் அன்னியரது ஆட்சியதிகாரம் வலிவுற்றிருந்தமையால் அழிவின் விளிம்பில் நின்று ஊசலாடிய வேளையில் அந்நிய ஆதிக்கப் பிடியிலிருந்து சைவத்தையும் தமிழையும் மீட்டெடுக்கவல்ல மீட்பராக அவதரித்த பெருமைக்குரியராக விளங்குகிறார். இவர் தனது சொல்லாலும் எழுத்தாலும் செயலாலும் சுயசமய கலாசார வரன்முறைகளை மறந்து வாழ்ந்த மக்களின் அகக் கண்களை திறந்து உண்மை நிலையை அவர்களுக்குணர்த்தியமையுடன்டன் சைவமும் தமிழும் அழியவிடாமற் பாதுகாத்து அவை புத்துயிர் பெற தன்னாலியன்ற அத்தனை பணிகளையும் செவ்வனே செய்த ஆபத்பாந்தவனாக விளங்கினார். இவர் தனது பணிகளை இலங்கையில் மாத்திரம் எல்லைப்படுத்தாமல் தென் இந்தியாவிலும் விரிவு கண்டன. இவரது பணிகள், சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டமையால் இவரை மக்கள், ஐந்தாம் குரவராகவும் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனைத்தான் மேற்போந்த கீதோபதேசம் வெளிப்படுத்தி நிற்கிறது.

நாவலர் பெருமானின் சமயப் பணிகளுள் மிகமுக்கியமானது திண்ணைப் பள்ளிக்கூடங்களை நிறுவி ஏழைமாணவர்களுக்கு கல்வி புகட்டியமையாகும். அவரால் முதன்முதல் ஸ்தாபிக்கப்பெற்ற சைவப்பாடசாலை வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை. இது 1848 இல் நிறுவப்பட்டது. இங்கு மட்டுமன்றி இந்தியாவின் சிதம்பரத்திலும் 1864ஆம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவி கல்விப்பணியாற்றினார். பள்ளிகளை நிறுவுவதால் மட்டும் கல்வியறிவூட்ட முடியாது. மாணவர்களுக்கான பாட விதானங்களை தயாரித்து அவற்றை ஒழுங்குறத் தொகுத்து நூலுருவில் வெளிக்கொணர வேண்டும். அப்போதுதான் கற்றல் - கற்பித்தல் செயன்முறை இலகுவாக்கப்படும் என்ற யதார்த்தத்தை உணர்ந்தவராக யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அச்சுக்கூடங்களை நிறுவியதுடன் ஏராளமான சைவசமயம், மொழியியல் சார்ந்த நூல்களை எழுதி - யாத்து, ஏலவே காணப்பட்ட பழம்பெருமை வாய்ந்த இலக்கியங்கள், புராணங்கள், சாத்திரங்களை தனது உரைநடையில் – மொழிநடையில் எழுதியும் ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல்லரிய நூல்களை ஆய்வுசெய்தும் மீள்பதிப்புச்செய்து அச்சு வாகனமேற்றினார்.

சமகாலத்தில், எமது பாடசாலைகளில் சமயக் கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் குறைந்து வருகின்றமையைக் காணமுடிகிறது. இதன்விளைவு அறநெறிகள், ஒழுக்க விழுமியங்கள் தலைசாய்ந்து அக்கிரமங்கள், அட்டூழியங்கள் தலைதூக்கிவருகின்ற இக்காலகட்டத்தில் அறநெறிக் கல்வியறிவூட்டலின் தேவைப்பாடுகள் மேலெழுகின்றன. அன்று இதனை நன்குணர்ந்த எங்கள் நாவலர், சமயக்கல்வி ஊடான அறநெறிக்கல்வி முறையைப் புகுத்தி நாடு பெருமை கொள்ளுமளவிற்கு கல்விச் சாதனைகளை நிகழ்த்தினார். கல்வி அழகும் அற ஒழுக்க நெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத்துடித்தார். ஈற்றில் வெற்றியும் கண்டார். அதற்கு அவர் கொடுத்த விலையோ சொல்லும்தரமன்று. சமூக மேன்மைக்காகவும் மக்களது விடிவுக்காகவும் கடுமையாக உழைத்தார். தனது அறப் பயணத்திற்கு இல்லறம் தடையாகவிருக்கும் எனக்கருதி இல்வாழ்வையும் துறந்தார். அதுமாத்திரமன்றி சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சைவசமய உண்மைகளை எடுத்தியம்பி பிரசங்கம் செய்தல், பஞ்சபுராணம் ஓதுதல், புராணபடனம் செய்தல் மற்றும் துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள் என்பவற்றை வெளியிட்டும் சைவ மக்களிடையே புகுந்திருந்த கறைகளை - மாசுக்களையகற்றி புறச்சமயவாதிகளின் தீவிர பிரசாரங்களை தடுக்க எதிர்ப்பிரசாரம் செய்தார். ஈழத்தில் முதன்முதல் புராணபடன மரபை தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். குறிப்பாக புராணபடனத்தில் கந்தபுராணம் சிறப்பிடம் பிடித்தமையினால், யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என சிறப்பித்து போற்றவும் அடிகோலியது. ஆலயங்கள் ஆன்மாக்கள் லயிக் கும் புனிதமான இடம். அவற்றைக் காவார்விடுதல் மகா பாவம். எனவே, அவற்றை புனரமைத்து, நித்திய நைமித்திய பூசைகளை கிரமாக செய்வதற்கு வழிவகுத்தமையால் ஆலயங்கள் மீண்டும் பொலிவுற்று விளங்கலாயிற்று.

நாவலர் செய்த அறப்பணிகளுள் காத்திரமானதாக அமைவது, பல சமய நூல்களை எழுதிவெளியிட்டமையைக் குறிப்பிடலாம். குறிப்பாக சைவவினாவிடை, சைவசமய நெறி, சைவதூ சண பரிகாரம், பாலபாடம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், இலங்கை பூமி சாஸ்திரம், சிதம்பர மான்மியம், கொலை மறுத்தல், கோயிற் புராணம் உரை, ஏரெழுபது, சூடாமணி நிகண்டு உரை, யாழ்ப்பாணச் சமய நிலை, திருத்தொண்டர் புராணம், சிவராத்திரி புராணம், திருமுருகாற்றுப் படை, தொல்காப்பியம் சூத்திர விருத்தி, நன்னூல் விருத்தியுரை, நீதிநூற்திரட்டு, திருவாசகம், விநாயக கவசம், போலியருட்பா மறுப்பு, பிரபந்தத் திரட்டு, சிவாலய தரிசனவிதி, திருக்குறள் பரிமேழகர் உரை, தாயுமான சுவாமிகள் திருப்பாடற் திரட்டு, தனிப்பாமாலை என்பவை குறிப்பிட்டுக் கூறக் கூடியவையாகும். மொத்தமாக, அவர் இயற்றிய நூல்கள் - 23, உரை செய்தவை - 08, பரிசோதித்து பதிப்பித்தவை - 39, யாத்த பாடல்கள் -14 என்றவாறாக அமைகின்றன.

மேலும் தான் செல்லுமிடமெங்கும் சைவசமயப் பிரசாரங்களை முடுக்கிவிட்டு, சைவநாயன்மார்களது திருமுறைகளையும் மக்களிடத்தே விளங்கச்செய்த பெருமையும் நாவலரையே சாரும். குறிப்பாக திருவாவடுதுறையினின்று ஓதுவார் மூர்த்திகளை அழைத்து வந்து இங்குள்ள ஓதுவார்களுடன் சேர்ந்து நல்லூர்த் திருவிழாக்காலங்களில் திருமுறைகளை ஓதுவித்தார். நல்லூர் கந்தன் ஆலயத்திற்கும் நாவலருக்குமிடையே நெருக்கமான பிணைப்பிருந்தது. நல்லூரை நிலைக்களனாக கொண்டே இவரது பணிகள் அமைந்தன. இருந்தும் சைவாகம விதிமுறைகளை பின்பற்றியதன் நித்திய நைமித்திய கிரிகைகள் ஆற்றப்படல் வேண்டும் என்ற இவரது கொள்கை ஆலய நிர்வாகத்தால் புறந்தள்ளப்பட்டமையால் மாப்பாணர் பரம்பரையில் வந்த நல்லூர் நிர்வாகத்திற்கும் இவருக்குமிடையே அவ்வப்போது தகராறுகள் ஏற்பட்டமையும் சுட்டியுரைக்கத்தக்கது.

ஆங்கிலேயராட்சி மேலோங்கியிருந்த அக்காலகட்டத்தில் சைவநெறியை பின்பற்றியோர் பட்ட இன்னல்கள் பல. அவற்றுக்கு மத்தியில் தனியொருவராக துணிந்து நின்று போராடி வெற்றி பெற்ற கர்ம வீரரான இவர், அக்காலகட்டத்தில் ஏற்பட்ட பாடசாலைக்கல்வி, அச்சு இயந்திர வருகை, சுதேசிகளும் பாடசாலைகளை அமைக்கலாம் என்ற சுதந்திரம், எழுத்தின் - அச்சின் பெருக்கம், ஆங்கிலக் கல்வியின் விருத்தி, வேலை வாய்ப்புகள் என்றவாறான அரசதாராண்மைவாதத்தால் நவீன உரைநடையின் தேவையை வெளிப்படுத்தின. ஆதன்வழியாக சுதேசிகளும் நவீன உரைநடை மொழியை உருவாக்க முனைந்தனர். இம்முயற்சியில் பெருவெற்றியீட்டியவராகவும் உரைநடைகை வந்தவல்லாளராகவும் வசனநடை தற்கால உரைநடையின் தந்தையாகவும் இவர் சித்திரிக்கப்படுகிறார். நாவலரது எழுத்து அல்லது மொழியானது சைவத்தையும் தமிழையும் நிலைநிறுத்தவும் மீளுருவாக்கம் செய்யவும் கிறிஸ்தவ மதத்திற்கெதிராகவும் அமைந்தது. இவரின் மொழிக்கொள்கை வழியேதான் இன்றளவும் தமிழ்மொழி தன்னிலைகெடாது திகழ்கின்றது எனில் மிகையில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

# காலத்தின் குரலாய் ஒலித்த நல்லை நகர் நாவலர் பெருமான்!

உலகிலே பலமொழிகள் இருக்கின்றன. அந்த மொழிகள் எல்லாமே ஒவ்வொரு வகையில் முக்கியத்துவமும், தனித்துவமும் மிக்க மொழிகளாய் விளங்குகின்றன. இந்த உலக மொழிகளில் ஒன்றாய் இருக்கின்ற எங்கள் தமிழ் மொழிக்கு மற்றைய மொழிகளில் இல்லாத தனித்துவமும், சிறப்பும் இருக்கின்றன என்பதுதான் மிகவும் முக்கியம். அப்படி என்னதான் சிறப்பு தமிழ் மொழிக்கு வாய்த்திருக்கிறது? அந்தச் சிறப்புத்தான் பக்தி இலக்கியம் என்னும் தனித்துவமான சிறப்பு.

உலகின் எந்த மொழிகளிலும் பக்தி இலக்கியம் என்று சுட்டிக்காட்டப்படும் அளவுக்கு இல்லை என்பதே அறிஞர்களின் கருத்தாக அமைகிறது. இந்தப் பக்தி இயக்கத்தின் முதற்குரலாய் தமிழ் உலகில் ஒலித்த குரல் ஒரு பெண்மணியின் குரல் என்பதை மனமிருத்தல் அவசியமாகும். அவர்தான் காரைக்கால் தந்த பெருமாட்டி, தவப் புதல்வி காரைக்கால் அம்மையார் ஆவர்.

இவர் சைவ பக்தி இயக்கத்தின் எழுகின்ற ஞாயிறாய் – பின்னர் வந்த அடியார்கள் அனைவருக்குமே ஆதாரமான குரலாய் விளங்குகிறார். சைவத் திரு முறைகளின் தோற்றத்தின் குரலாயும் நிற்கின்றார். இவர் சைவத்தைக் காத்திடக் கையில் எடுத்தது அமிர் தமாம் தமிழ் மொழியையேயாகும். தமிழ் மொழி யில் – அற்புதத் திருவந்தாதி, திரவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவற்றை அளித்து ஆன்மீகக் குரலாய் ஒலித்து நிற்கிறார். இவரின் பின்னர் வந்த அடியார்கள் பல ரும், அம்மையாரைப் பின்பற்றி இறைபுகழ் பரப்புவ தில் தங்களின் குரலை ஒலித்து நிற்கிறார்கள்.

ஆழ்வார்கள் வந்தார்கள். ஆளுடைய பிள்ளையார் வந்தார். அப்பர் வந்தார். ஆலால சுந்தரர் வந்தார். வாதவூர் வண்டும் வந்தது. இவர்கள் அனைவரின் குரல்களும் தமிழில் சைவத்தை நிலை நாட்டிட ஓங்கி ஒலித்து நின்றன எனலாம். இந்தக் குரல்கள் ஒலித்த காலம் வேறு. அந்தக்காலச் சூழலும் வேறு. அவர்களின் குரலில் காணப்பட்ட தத்துவங்களும் வேறு. அவர்கள் அனைவருமே அந்தக் கால தமிழ் இலக்கியத்தின் போக்கினை மனமிருத்தி பாடல்களை ஊடகமாகக் கொண்டே தமது குரலை வெளிப்படுத்தும் கட்டாயம் காணப்பட்டது. ஏனெனில் தமிழ் இலக்கியத்தை ஆட் கொண்டு இருந்த வடிவம் பாட்டு அல்லது செய்யுள் வடிவமேயாகும்.

காலம் மாறுகிறது. கோலமும் மாறுகிறது. சமூகத்தின் சிந்தனையும் மாறுகிறது. ஆனால் ஆன்மீகம் என்பது மட்டும் என்றுமே மாறிவிட மாட்டது. காலத்தின் மாற்றத்துக்கு ஏற்ப கருத்து மோதல்களும், பிற மோதல்களும் பெருகுவது மட்டும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைந்துவிடும். அத்தகைய வேளையில் சமயம் தளரும். சமய தத்துவங்கள் கேள்விக்குறியாக்கப்படும். அந்நிய சக்திகளால் – மொழியும் , சமயமுமே கேலிக்கு உரியதாக ஆகும் நிலையும் ஏற்பட்டு விடலாம். அப்படியான நிலை தோன்றும் வேளை – அந்தகார இருளில் சிக் கித் தவிக்கும் மக்களை, சமுதாயத்தைக் காப்பாற்ற ஒரு குரல் கட்டாயம் தேவைப்படுகிறது. அப்படியான ஒரு தைரியம் வாய்ந்த, தகுதியான குரலை ஓங்கி ஒலிக்க வைப்பதற்கு ஒருவரை ஆண்டவன் கட்டாயம் அனுப்பியே வைப்பான், அப்படி அனுப்பி வைக்கப் படுபவர் காலத்தின் குரலாய் வரலாற்றில் இடம் பிடித்தே நிற்பார். அப்படி காலத்தின் குரலாய் ஆகி நிற்பவர்தான் நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் ஆவார்.

அந்நியரான ஆங்கிலேயர் ஆதிக்கம். அவர்கள் வைத்ததுதான் சட்டம். அவர்களின் ஆதரவுடன் அந்நிய மதமான கிறிஸ்தவம் பரப்பப்படுகிறது. மதத்தைப் பரப்புவதற்கு அரசாங்கமே பக்கத்துணையாய், பணமும் கொடுக்கிறது. பாதுகாப்பும் கொடுக்கிறது. சலுகைகளைக் காட்டி சைவர்களை மதமாற்றம் செய்வதில் தீவிரமாய் ஈடுபடுகிறது கிறீத்தவ சபையும் அதன் மதபோதகர்களும். சலுகைகளைக் கண்டவர்கள் சலனப்படுகிறார்கள். சொந்தச் சொத்தான சைவத்தை மறக்கிறார்கள். கிடைத்த அற்ப சலுகைகளுக்குள் அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். என்றாலும் அவர்கள் மனதில் தங்களின் சமயம் ஒட்டிக் கொண்டிருப்பதை அகற்றிடவே முடியவில்லை. அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் திரிசங்கு நிலையிலே பலர் இருந்தார்கள் என்பதை பல செய்திகள் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது.

நாவலர் பெருமான் பாரம்பரியமிக்க சைவக் கு டும்பத்தில், சைவச் சூழலில் பிறந்தவர். அவர் பிறந்த இடமே கோவில் அருகில் இருக்கும் இடமாகும். திருநீறு பூசி சிவனைத் தியானிக்கும் குடும்பந்



தான் நாவலரின் குடும்பம். நமச்சிவாய என்னும் நாமமே நம்மை என்றும் காத்திடும் என்னும் அசையா நம்பிக்கை கொண்ட குடும்பம்தான் நாவலர் குடும்பம். ஆசார அனுட்டானங்களை அனுட்டித்து சைவத்தை உயிராக எண்ணிய குடும்பம்தான் நாவலர் குடும்பம். அந்தக் குடும்பத்தில் பிறந்ததால் நாவலரின் உணர்வெல்லாம் சிவனும் , சைவமுமே நிறைந்து காணப்பட்டன. அதனால் அவர் சைவத்தைக் காத்திடும் குரலாய் அந்தக் காலத்தில் விளங்கும் கட்டாயம் ஏற்பட்டது.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழை முறையாகக் கற்றார். இலக்கியம் கற்றார். இலக்கணம் கற்றார். புராண, இதிகாசங்களை எல்லாம் ஐயந் திரிபறக் கற்றார். அந்தக்காலச் சூழலுக்கு அமைய, பெற்றவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஆங்கிலக் கல்வியைப் படிக்க பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆங்கிலக் கல்வியைக் கற்றால்த்தான் அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் என்னும் நிலை மேலோங்கிக் காணப்பட்ட காலம் அது. தங்கள் பிள்ளை படித்து பெரிய பதவியில் அமரவேண்டும் என்று நாவலர் பெற்றாரும் எண்ணங் கொண்டிருந்தனர். ஆனால் இறைவன் திருவுள்ளமே வேறாக, மாறாக , அமைந்தது. இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாய் விளங்கும் கல்லூரியில்தான் நாவலர் ஆங்கிலக் கல்வியை மேற்கொண்டார்.

சைவமும் சிவமும் உள்ளத்தில் நிறைந்திருக்க, கிறிஸ்தவப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் நிலை நாவலருக்கு ஏற்பட்டது. ஆங்கிலத்தை நன்றாகவே கற்றார். பள்ளியில் இருந்த பார்சிவல் பாதிரியாரால் பெரிதும் மதிக்கப்பட்டார். நாவலரின் தமிழ் மொழி ஆற்றலைக் கண்டு அவர் வியந்தார். அத்துடன் தங்களின் மொழியான ஆங்கிலத்தின் ஆற்றல் கண்டும் நாவலர் மீது தனிப்பட்ட பற்றும் பாசமும் கொண்டார் பார்சிவல் பாதிரியார். அந்தப் பற்றினால் விவிலியத்தை தமிழில் மொழி பெயர்க்கும் பாரிய பொறுப்பினை வழங்கினார். நாவலரும் அப்பணியினை யாவரும் பாராட்டும் வகையில் செய்து முடித்தார். சைவத்தை மனம் நிறைத்த நாவலர் விவிலியத்தை எப்படி மொழி பெயர்க்க ஒப்புக்கொண்டார் என்பது ஒரு பெரும் புதிராகவே இருக்கிறதல்லவா? வேதங்களை வகைப்படுத்தி, அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் மாக்ஸ் முல்லர் என்னும் ஆங்கிலேய கிறிஸ்தவராவர். திருவாசகத்தைக் கையிலெடுத்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் வண. ஜி.யூ, போப் அவர்கள். இவர் தன்னை போப்பையர் என்று அழைத்ததாக அறிகின்றோம். ஆனால் அவர்கள் எவருமே தங்கள் மதத்தை விட்டு மற்றைய மதத்துக்கு மாறவில்லை என்பது நோக்கத்தக்கது. அந்த வழியில்தான் நாவலர் பெருமானும் தன்னுடைய குருவின் சொற்களுக்கு மதிப்புக் கொடுக்கவே விவிலிய மொழி பெயர்ப்பில் ஈடுபட்டிருக்கலாம் அல்லவா? மொழி பெயர்த்த நிலையில் நின்றுவிடுகிறார். சைவம்தான் அவரின் உணர்வுள் ஊறி இருந்தது.

விவிலியத்தை மொழி பெயர்த்தபடியால் கிறிஸ்தவம் பற்றிய நுட்பங்களை நாவலர் நன்கு தெளிவாகவே அறியும் வாய்ப்புக் கிட்டியது. இதனால் எதிர் வாதமிட வந்த அன்னிய மத போதகர்கள் வாய் பேசாது மெள்னியாய் ஆக்கிடும் வகையில் அவரின் குரல் ஓங்கி ஒலிக்கக் கூடியதாக இருந்தது. சைவத்தையும் நன்கறிந்திருந்தார். கிறிஸ்தவத்தையும் உள்நுழைந்து அறிந்திருந்தார். இதனால் நாவலர் பெருமானின் குரல் அக்காலத்தில் வலிமைமிக்க குரலாய், மாற்று மதத்தினருக்குச் சிம்மக்குரலாய் அமைந்தது.

நல்லவை எங்கிருந்தாலும் அதனை நாவலர் உள்வாங்கினார். அந்நிய மத போதகர்கள் தங்கள் மதத்தைப் பற்றி நல்ல அறிவு பெற்றிருந்தனர். தங்களின் மதத்தைப் பரப்புவதற்கு தேவாலயங்களைப் பயன்படுத்தி – தங்கள் மதம் தொடர்பான விளக்கங்களைத் தெளிவாகப் பிரசங்கம் மூலம் செய்தார்கள். இந்த நடைமுறை நாவலர் உள்ளத்துள் பதிந்து விட்டது. அந்நிய மதத்தார் இப்படிச் செய்வதால் பாமரமக்கள் அவர்கள் பக்கம் பார்ப்பதை அவர் உற்றுக் கவனித்தார். சைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் மத்தியில் காணப்பட்ட நிலைமைகள் நாவலருக்கு ஒவ்வாததாய் அமைந்தன.

கிறிஸ்தவ பாதிரிமாரிடம் நிறைந்து காணபட்ட கல்வி அறிவு – சைவசமயக் குருமாரிடம் காணப் படாமையினைப் பொறுக்க இயலா நிலையில் நாவலரின் குரல் ஓங்கி ஒலித்துக் கண்டித்தே நின்றது. சைவத்துக்குப் புறம்பான நிகழ்வுகள் கோவில்களில் நிகழும் பொழுது நாவலரின் குரல் கோபத்துடன் எழுந்தே ஒலித்தது. சைவ ஆசாரங்கள் நிலை தளரும் பொழுது அவரின் குரல் ஆணி அடித்தாற் போலவே எங்கும் ஒலித்து நின்றது.

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நல்லைநகர் பெருமானார் எல்லையிலாப் புகழடைந்தார்

**அன்னியமாம் பேரிருளில் அகப்பட்ட சைவமதை**
**முன்னின்று பேரொளியாய் காத்திடவே வந்தமைந்த**
**நல்லைநகர் நாவலராய் நல்வரமாய் ஆறுமுகம்**
**எல்லோரும் மதித்திடவே ஈழமதில் பிறந்தனரே**

**கருவினிலே சமயநெறி நிறைந்தவராய் பிறந்தமையால்**
**கருதியது அத்தனையும் சமயநெறி ஆகியது**
**குறைகளைய புறப்பட்ட குறையில்லா பெருமகனாய்**
**நிறையறிவாய் விளங்கினரே நிமலனருள் நாவலரும்**

**நீறணிந்த மேனியராய் நெஞ்சமெலாம் சிவனினைவாய்**
**ஆறுமுக நாவலரும் ஆசாரம் பேணினரே**
**தந்தையினைக் குருவாக்கி தாம்கற்றார் பலவற்றை**
**ஐயமின்றி கற்பதிலே அவர்கவனம் நின்றதுவே**

**ஆங்கிலத்தைக் கற்றிட்டார் அன்னியத்தை ஒதுக்கிட்டார்**
**அழகுதமிழ் இலக்கணத்தை அறிந்துவிட உரைவகுத்தார்**
**பாமரரும் விளங்குதற்கு பாங்கான உரைநடையை**
**பக்குவமாய் வழங்கிட்ட வல்லாளர் ஆகிநின்றார்**

**சமயத்தை விளக்குதற்கு சரியான வழியென்று**
**பிரசங்க வடிவத்தை பேருரமாய் கொண்டாரே**
**அரனாரின் ஆலயங்கள் அரங்கமாய் ஆக்கியே**
**ஆறுமுக நாவலரும் அரும்பணிகள் ஆற்றிநின்றார்**

**சமயத்தை வளர்ப்பதற்கு தமிழையே கையெடுத்தார்**
**தமிழ்கொண்டு சைவத்தை தான்விளக்க முன்னின்றார்**
**கல்வியொடு ஒழுக்கமதை கற்பிக்கப் பலபள்ளி**
**நல்லைநகர் நாவலரும் நன்றாகத் தாபித்தார்**

**அன்னைத் தமிழோடு ஆங்கிலமும் வடமொழியும்**
**ஆறுமுக நாவலரின் அரணாக அமைந்ததுவே**
**கேட்டிடுவார் மனம்பதிய கருத்துரைக்கும் ஆளுமையால்**
**நல்லைநகர் பெருமானார் எல்லையிலாப் புகழடைந்தார்**

**ஈழத்தின் வரலாற்றில் இணையில்லாப் பெருமகனாய்**
**நல்லைநகர் நாவலரை நாடுபோற்றி நிற்கிறது**
**வேதமொடு ஆகமங்கள் விளங்குகின்ற சைவமதம்**
**நாவலரை நினைப்பதற்கு நம்சொத்தாய் அமைந்திருக்கு**

**– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா –**
**(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**

# சீரற்ற வானிலையால் முல்லையில் ஒருவர் சாவு 34 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவிப்பு





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் கனமழை மற்றும் அனர்த்தம் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் 34 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து கனமழை பெய்து வருகின்றது. இந்நிலையில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் வீடுகள் சிலவற்றிற்குள் வெள்ளம் புகுந்து காணப்படுவதோடு வயல் நிலங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. இதன்காரணமாக பல்வேறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடும் காற்று வீசுவதோடு பல்வேறு அனர்த்தங்களுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் கனமழை மற்றும் அனர்த்தம் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் 34 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும் புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும் தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 34பேரும் மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருமாக 19 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை மன்னாகண்டல் பகுதியில் மரணம் ஒன்றும் பதிவாகியுள்ளது.

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து மழை பொழிந்துவரும் நிலையில் குளங்கள் பல வான் பாய்ந்து வருகின்றன. அத்தோடு கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதோடு கடும் காற்றும் வீசி வருகின்றது. இன்னும் மழை தொடருமானால் கடும் பாதிப்புக்கள் ஏற்படும்.

இவ்வாறு மழை காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஆனந்தபுரம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் அவர்களுடைய வீடுகளில் இருந்து இராணுவத்தினரால் படகு மூலம் கொண்டு வரப்பட்டு ஆனந்தபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மக்கள் தங்களுடைய வீடுகளுக்கு வெள்ளம் வர பிரதான காரணம் எமது பகுதியில் உள்ள நீர் செல்லும் கழிவு வாய்க்காலை மறித்து வயல் விதைத்துள்ளார்கள். இதுதொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குறைபாட்டை உடனடியாக சீர்செய்து தருமாறும் தமது போக்குவரத்துக்கு குறித்த பகுதியில் பாலம் ஒன்றை அமைத்து தருமாறும் மேற்படி இடத்தில் பாலம் இல்லாமையால் தாம் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றோம் எனவும் கடந்த பத்து நாள்களாக பிள்ளைகள் பாடசாலைக்கு கூட செல்லவில்லை எனவும் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே குறித்த கழிவு வாய்க்காலுக்கு ஊடாக செல்லும் பாதையில் பாலத்தை அமைத்துத் தருமாறும் கழிவுநீர் செல்ல இடையூறாக உள்ள வயல்களை அகற்றி நீர் கடலுக்கு செல்ல ஆவண செய்யுமாறும் கோருகின்றனர்.

# காலத்தின் குரலாய் ...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவில்களில் பூசை செய்து நின்ற அந்தணக் குருமாரையும் அவரின் குரல் விட்டு வைக்கவே இல்லை எனலாம். யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் நூல் நாவலரின் அக்காலக் குரலாய் அமைந்தது என்பது நோக்கத்தக்கதேயாகும்.


சைவத்தின் கருவூலங்களான புராணங்களை, திருமுறைகளை யாவரும் அறிய வேண்டும். அத்துடன் யாவர் உள்ளத்திலும் அமர வேண்டும் என்னும் எண்ணம் நாவலரிடம் நிறைந்தே காணப்பட்டது. ஆனால் அக்காலச் சூழலில் பாமரமக்கள் பலர் இவற்றை அறியாதவர்களாகவும், விளங்காதவர்களாகவுமே காணப்பட்டார்கள். இந்த நிலையில் இருந்தவர்களிடையே - தம்முடைய பிரசங்கங்களால் அந்நியர்கள் மதமாற்ற முயற்சியை மேற்கொள்ளுவது இலகுவாய் அமைந்ததை நாவலர் கண்ணுற்றார். கண்ணுற்றவர் உள்ளம் கலங்கியது. இப்படியே விட்டால் சைவம் என்னும் பெயரே இல்லாமற் போனாலும் போய்விடுமோ என்று கவலைப்பட்டார். கவலைப்பட்ட நாவலர் கவலைப்பட்டுக் கொண்டு இருந்துவிடாமல் - படிப்பறியாத பாமர்களை மனங்கொண்டும், பேதலித்து நிற்பாரை மனங்கொண்டும் - வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலை மையமாக்கி தன்னுடைய உள்ளத்துணர்வுகளைச் சைவப்பிரசங்கமாய் தொடங்கினார். இங்கு புராணங்கள், இதிகாசங்கள். திருமுறைகள், சைவ நடைமுறைகள் அத்தனையும் நாள்கள் தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் காலத்தின் குரலாய் நாவலர் பெருமானிடம் இருந்து வெளிப்பட்டு நின்றது.

கந்தபுராண கலாசாரம் என்னும் கருத்தே நாவலரின் உள்ளத்தின் உன்னதமான குரலாகும். நாவலர் என்னும் பெருமகன் மட்டும் அந்தக்காலத்தில் பிறந்திராவிட்டால் - அவரின் குரல் சைவமாய் , தமிழாய் , நல்லொழுக்கமாய், ஓங்கி ஒலித்திருக்காவிட்டால் அக்காலச் சூழலினால் அத்தனையும் எங்கேயோ ஓடி மறைந்திருக்கும். ஆனால் நாவலரின் குரலோ காலத்தின் குரலாய் ஓங்கி ஒலித்தே நின்றிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை எனலாம். அதனை வலியுறுத்திட நல்லதொரு சான்றாக வந்து அமைந்ததுதான் இப்பாடல்.

**நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்**
**சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்**
**ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேப்ர சங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே அறை**

சைவத்தைக் காத்திட, தமிழைக் காத்திட , சமூக ஒழுக்கத்தைக் காத்திட - நாவலர் இல்லறத்தையே ஒதுக்கி சமூக ஞானியாய் , சமய ஞானியாய் , மொழியில் தத்துவத்தில் ஞானியாய் ஆகி நின்றார். கல்வியில் கால்பதித்தார். கடமையில் கால்பதித்தார். கண்ணியத்தில் கால்பதித்தார். கடவுள் கொள்கையில் கால்பதித்தார். தர்மத்தில் கால்பதிந்தார். சன்மார்க்க வழி நடந்தார். எந்தத்துறையினை எடுத்தாலும் அங்கெல்லாம் நாவலரின் பொறுப்பான குரலே ஓங்கி ஒலித்து நின்றது. அவரின் குரல் ஒலித்த இடமெல்லாம் குறைகள் என்னும் இருள் ஓடியே ஒழிந்தது. நாட்டின் தேசியப் பெருமகனாய் நாவலர் பெருமான் கொண்டாடிப் போற்றப்பட்டார். அப்படி அவர் போற்றப்படுகிறார் என்றால் அவரின் குரல் காலத்தின் குரல் ஆகியே இருக்கிறது என்பதுதானே உண்மை!

# குறிஞ்சாக்கேணி பாதை விபத்தில் உயிரிழந்த மாணவர்களுக்கு விக்னேஸ்வரன் அஞ்சலி



குறிஞ்சாக்கேணி பாதை விபத்தில் தமது இன்னுயிர்களை நீத்த பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேரின் ஆத்மா அமைதி பெற முதற்கண் எனது பிரார்த்தனையையும் அவர்களின் பெற்றோர் உறவினர்களுக்கு எனது மனதார்ந்த இரங்கல் செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.விக்னேஸ்வரன்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

முழுக்க முழுக்க பாதுகாப்பற்ற ஒரு பாதையைத் தயார்செய்து அதன் பயணப் பாதுகாப்பிற்கு எந்தவித உத்தரவாதமும் அற்ற நிலையில் அது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. குறிஞ்சாக்கேணியில் வாழ்கின்ற மக்கள் திருகோணமலை, கிண்ணியா போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு இந்த ஒரு பாதை மட்டுமே காணப்பட்டதால் மக்களும், மாணவர்களும் எப்படியும் இதில் பயணஞ் செய்ய வேண்டியிருந்தது. இந்த விடயத்தைக் கவனிக்க வேண்டிய பிரதேசசபை, நகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, துறை சார்ந்த அமைச்சுக்கான அமைச்சர், பிரதமர் அனைவரும் கூட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். பயன்படுத்தப்பட்ட பாதை பயண ஒழுங்குக்கு ஏற்றதல்ல என அனுமதி மறுப்புத் தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்று ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்த முடியாமல் போனமை வேதனைக்குரியது. ஆறு இன்னுயிர்களைக் காவு கொடுத்த பின்பு பயன்படுத்தப்படுகின்ற ஐந்து பஸ்களையும் முன்பே சேவையில் ஈடுபடுத்தியிருந்தால் இந்த அனர்த்தம் இடம் பெற்றிருக்காது.

வடக்கு கிழக்கில் அபிவிருத்தி தொடர்பில் எம்மால் முன்மொழியப்படுகின்ற கோரிக்கைகள் உடனடியாகவே குப்பைக் கூடைக்குள் போடுவதற்கு யார் காரணம் என்பதை இனியேனும் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இனி வரும் காலங்களிலாவது இனவிரோதச் செயற்பாடுகளைத் தவிர்த்து அத்தியாவசியத் தேவை அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது.

# நாவலர் பணிக்கு பெருமை சேர்க்க ....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறாக தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் சைவத்திற்கும் தமிழுக்குமாக அர்ப்பணம் செய்து வாழ்ந்தார். இதன்மூலம் இவ்விருகூறுகளும் புதிய தளத்திற்கு, நவீனமயமாதலுக்குட்பட்டன. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிப் பரிச்சயமுடையவராகவும் கல்விப்புலமை மிக்க உரையாசிரியர், பதிப்பாசிரியர், நூலாசிரியர், பேச்சாளர் என்கின்ற பன்முகத் தன்மை வாய்ந்த ஆளுமைமிக்கவராகவும் விளங்கினார். வறுமையுற்றவர்களின் பசிப்பிணியை நீக்குவதற்காக அன்னதானம், கஞ்சித் தொட்டித் தருமம் செய்த பசிப்பிணி மருத்துவருமாவார்.

சைவசமய வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் தமிழ்மொழியின் உயர்ச்சிக்கும் வித்திட்ட பெருமகனாகிய நாவலர் 1879ஆம் ஆண்டு கார்த்திகை 21மக நட்சத்திரத்தில் இறைபதமெய்தினார். நாவலருக்குப் பின்னர், இவரது இடைவெளியை இட்டு நிரப்பக்கூடியளவிற்கு எவரொருவரும் இம்மண்ணில் பிறக்கவில்லை என்ற நிலைமையானது இவருக்கிருக்கக்கூடியதான சிறப்பை மேலுயர்த்தி நிற்கிறது.

இவரது அறப்பணியை நினைவு கூர்ந்து இலங்கை அரசு 1971 ஒக்ரோபர் 29 இல் அஞ்சல் தலை ஒன்றையும் வெளியிட்டுக் கௌரவித்தமையின் பின்னர் இது போன்றதான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நடைபெற்றன என இதுவரை பதியப்படவில்லை. எனவே இவரது நற்பணிகளை சிறப்பித்து கௌரவம் செய்வதற்கான முன்முயற்சிகளை சமய நிறுவனங்கள் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!






**1. கேள்வி:-** வரவர ஆன்ம ஈடேற்றம் தருகிறேன் என்று சொல்லும் சுவாமிமாரின் தொகையும், அவர்களைப் பின்பற்றுவோர்களின் தொகையும் இந்து மதத்தில் அதிகரித்துக் கொண்டே போகிறதே. கவனித்தீர்களா?

**பதில்:-** இறைவனைத் தவிர வேறெவராலும் ஆன்மாக்களை ஈடேற்ற முடியாது என்கிறது நம் சைவம். ஆன்மாக்களை ஆள்வதால்தான் இறைவனுக்கு ஆண்டவன் என்று பெயர் வந்ததாம். அவனால் ஆளப்படுபவைதான் அனைத்து உயிர்களும். ஆள்பவன்தான் ஆண்மகன். அவனால் ஆளப்படும் அனைத்து உயிர்களும் பெண்கள்தான். அதனால்த் தான் அனுபவப்பட்ட அடியார்கள் எல்லோரும் தம்மைப் பெண்ணாய் வைத்தே பாடியிருக்கிறார்கள். திருவருட்பயன் என்னும் நூலில் உமாபதிசிவாச்சாரியரர் சுவையான கருத்தொன்றைச் சொல்கிறார். ஆண்டவன் மட்டும்தான் ஆண்மகன். மற்ற உயிர்கள் எல்லாம் பெண்கள்தான் என்றால், ஓர் உயிர் இன்னோர் உயிரை ஈடேற்றல் என்பது, ஒரு பெண் இன்னொரு பெண்ணைத் திருப்தி செய்வதற்கு ஒப்பானது என்கிறார் அவர். “இருவர் மடந்தையர்க்கு என்பயன் இன்புண்டாம் ஒருவன் ஒருத்தி உறின்” என்பது அவர் தரும் குறள். சிவத்தால் அன்றித் திருவருட்சக்தியால் கூட ஓர் ஆன்மாவைப் பேரின்பம் கொடுத்து ஈடேற்ற முடியாது என்பது அவர் கருத்து. அப்படியிருக்கச் சாதாரண இன்றைய சுவாமிமார்கள் உயிர்களை ஈடேற்றுவேன் என்று சொல்வது வேடிக்கைதான். (பதில் சற்று போரடிக்கிறதா? அதற்குப் பொறுப்பாளி கேள்வி கேட்டவர்தான்.)

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சூப்பர். உவமை என்றால் இதுதான் உவமை!**

**2. கேள்வி:-** கனடாவில் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தைக் குழப்பியவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** எப்பேர்ப்பட்ட சாதனையாளர்கள்! இவர்களை நினைக்க வெட்கமாக இருக்கிறது. வெளிப்படையாகச் சொன்னால், முட்டாள் கூட்டமொன்றின் அநாகரிகச் செயற்பாடு இது என்பது தெளிவாகிறது. ஜனநாயகம் முறைப்படி காக்கப்படுகிற ஒரு நாட்டில், அந்த ஜனநாயகத் தன்மையை உள்வாங்கிய காவல்துறையினரின் முன்னால் இத்தகைய “ரௌடித்தனத்தை”க் காட்டுவதற்குப் பெரிய ஆற்றல் ஒன்றும் தேவையில்லை என்று நினைக்கிறேன். முடிந்தால் அந்த வீரர்கள் நம் நாட்டிற்கு வந்து நமது காவல்துறையினரின் முன் இந்த



வீரத்தை (?) அரங்கேற்றிப் பார்க்கட்டும். அப்போது தெரியும் இவர்களுடைய வீரியம்.

யாராக இருந்தாலும் ஒருவர் தனது கருத்தைச் சமூகத்தின் முன் சொல்ல இடம் தரவேண்டும். அதுதான் ஜனநாயகப் பண்பு. ஒருவரைப் பேசவே விட மாட்டோம் என்பது அராஜகக்குணம். ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்து நடத்துவதற்குத்தான் ஆற்றல் தேவை. குழப்புவதை எந்த முட்டாளும் செய்யலாம். அதற்கு ஆற்றல் ஒன்றும் தேவையில்லை. அந்த “ரௌடிக்கும்பலின்” செயற்பாடு நம் ஈழத் தமிழினத்திற்கான தலைகுனிவு. அவர்களை “ரௌடிகள்” என்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்பீர்கள். அந்நிகழ்வின் காட்சிகளில் பதிவாகியுள்ள காதைக் கூசச் செய்கிற சத்தங்களைக் கேட்டே அவர்களை “ரௌடிகள்” என்கிறேன்.

ஒரு பக்கம் உலகின் முதல் வல்லரசாய்க் கருதப்படும் அமெரிக்கா, ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி ஆராயச் சுமந்திரன் தலைமையிலான குழுவினரை விரும்பி அழைத்துப் பேசுகிறது. இன்னொரு பக்கம் நமது “போக்கிலிகள்” கூட்டம் ஒன்று அதே சுமந்திரனை விசிலடித்தும் கூக்காட்டியும் இழிவு செய்கிறது. நம் இனத்தின் எதிரிகள் வெளியில் இல்லை. நமக்குள்தான் இருக்கிறார்கள் என்பது இன்னொரு முறை நிரூபணமாகியிருக்கிறது. கூட்டத்தைக் குழப்பியதோடு ஈழமக்கள் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாய் அந்தக் கும்பல் மகிழ்ந்து போயிருக்கும். ஈழத்தமிழர் பிரச்சினையில் இவர்கள் ஒரு துரும்பைத்தானும் அசைத்திருக்கமாட்டார்கள். தம் நலம் நோக்கி உறவுகளையும், இனத்தையும், நாட்டையும் விட்டு ஓடியவர்கள்தான் இவர்கள். இவர்களுக்கு, தாய் மண்ணில் நின்று நம் மக்களின் பிரச்சினைகளுக்காய் முகம்கொடுக்கும் சுமந்திரனை “துரோகி” என்று சொல்ல எந்த அதிகாரமும் இல்லை.

என் கவலையெல்லாம் நூறுபேர் கொண்ட கூட்டத்தைப் பத்துப் பேர் குழப்பக் கூடியதாக இருப்பது பற்றியதுதான். கெட்டவர்கள், நல்லவர்களை விட வலிமையுற்றதால் வந்த கோளாறு இது. இது இன்று, நேற்று நடப்பது அல்ல. அன்று தொட்டு நடக்கிறது. பாஞ்சாலியைத் துச்சாதனன் இழுத்து வந்த காட்சியைப் பாடிய பாரதி, துச்சாதனனைத் திட்டுவதற்கு முன் அதைப் பார்த்திருந்த கூட்டத்தாரை “வீரமிலாநாய்கள்” எனத் திட்டுகிறான். கூட்டம் குழப்பிய காட்சியைப் பார்த்தபோது என் மனநிலையும் அதுவாகத்தான் இருந்தது. “மோதி மிதித்து விடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா” என்றதான பாரதியின் ஆத்திரம்தான் என் அகத்திலும் பதிந்தது.

இதனால்தான் புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பில் எனக்கு மகிழ்ச்சி இல்லை என்று அடிக்கடி சொல்லி வருகிறேன்.

இது ஒரு பக்கம் என்றால், இச்சம்பவம் சம்பந்தமாகச் சுமந்திரனிலும் எனக்குக் கோபம் உண்டாகத்தான் செய்கிறது. ஆஸ்திரேலியாவிலும் முன்பு இப்படி ஒரு சம்பவம் நடந்ததால், இத்தகைய ஒரு நிகழ்வைச் சுமந்திரன் எதிர்பார்த்திருக்கவேண்டும். கூட்டம் நடத்தியவர்களிடம் சொல்லி அதற்கான பாதுகாப்பை முன்னமே செய்திருக்கவேண்டும். அல்லது எதிர்ப்பவர்களை எதிர்க்க ஒரு வலிய ஆதரவாளர் கூட்டத்தை அழைத்துச் சென்றிருக்க வேண்டும். அடுத்தநாள் அதே கூட்டத்தை நடத்த முடியுமென்றால், முதல் நாளே அதை ஏன் செய்திருக்கக் கூடாது? வருமுன் காப்போரை அறிஞர்கள் என்றும், வந்த பின் காப்போரை முட்டாள்கள் என்றும் பஞ்சதந்திரக்கதை சொல்கிறது. அரசியல் நடத்த சட்டம் மட்டும் படித்தால் போதாது. இவற்றையும் கொஞ்சமேனும் படிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாருக்கு இனி கனடா போகும் திட்டம் இல்லையோ?**

**3. கேள்வி:-** எங்களின் பேராசிரியர் ஒருவர் “திருக்குறளின் பால்கள் வரிசையில் காமத்துப்பாலுக்குத் தான் முதலிடம் கொடுத்திருக்கவேண்டும்” என்கிறார். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** அவரிடம் அகப்பட்டது உங்களின் தலைவிதி! தனது மனதில் முதலிடத்தில் இருக்கும் விடயத்திற்கு வள்ளுவரும் முதலிடம் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் போல. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என வள்ளுவர் வரிசைப்படுத்தியதன் காரணத்தைப் பரிமேலழகர் தனது உரையில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். இம்மை, மறுமை, வீடு எனும் மூன்று பயன்களையும் தரவல்லது அறம். இம்மை, மறுமைப் பயன்களைத் தரவல்லது பொருள். இம்மைப் பயனை மட்டும் தரவல்லது காமம். அதனால்த்தான் முக்கியம் கருதி அறம், பொருள், இன்பம் என வள்ளுவர் பால்களை அமைத்துள்ளாராம். படித்தால்தான் இவையெல்லாம் தெரியவரும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ காமம் செப்பாது கண்டது மொழிமோ ச்சும்மா.. ச்சும்மா..**

**4. கேள்வி:-** கப்பலில் வந்திருக்கும் இயற்கை உரம் சீனர்களின் மலக்கழிவு என்கிறார்களே?

**பதில் :-** நானும் கேள்விப்பட்டேன். ஆனால் அது பற்றி உறுதியாய்ச் சொல்லும் அறிவு எனக்கில்லை. செய்தி உண்மையாயின் அதன் மூலம் தெரியவரும் உண்மை அதிர்ச்சி தருகிறது. சீனர்கள் கழிவகற்ற முயற்சிக்கிறார்கள். நம்மவர்கள் கழிவேற்க முயற்சிக்கிறார்கள். கழிவகற்றுவது எப்போதும் ஆரோக்கியம்தான். கழிவேற்பது ஆரோக்கியமா? இலங்கைத் தாய்க்கு இப்படி ஓர் அவலமா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ காசு குடுத்துக் கழிவு வாங்கினோம். டும்.. டும்.. டும்”**

**5. கேள்வி:-** இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற பல நாட்டுத் தூதுவர்கள் நம் தமிழ்த்தலைவர்களைச் சந்திக்கத் தொடங்கியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** பருந்துகள் சுற்றத் தொடங்கினால் ஏதோ ஒரு கோழிக்குஞ்சை அவை கௌவப்போகின்றன என்பதுதான் அர்த்தம். கௌவப்படப்போவது தமிழ்க்குஞ்சா? சிங்களக்குஞ்சா? என்பது விரைவில் தெரிய வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ “தலைவர்கள் தத்தம் குஞ்சுகளைக் காப்பாற்ற முயற்சிப்பார்களாக. ஹி.. ஹி..!”**

**6. கேள்வி:-** கடவுள் இல்லை என்கிறேன் நான். அதுபற்றி என்ன சொல்கிறீர்?

**பதில் :-** மிக நல்லது. ஓர் பொருள் இருப்பதைப் பத்துப் பிரமாணங்களால் நிரூபிக்கலாம் என்கின்றனர் அறிஞர்கள். அப்பிரமாணங்களில் ஒன்றுதான் “இன்மைப் பிரமாணம்.” இல்லாத பொருளை இல்லை என்று சொல்லத் தேவையில்லை. எனவே ஒருவர் ஒரு பொருளை இல்லை என்கிறார் என்றால், அவர் பார்வைக்கு அப்பொருள் அகப்படவில்லை என்பது அர்த்தம். அல்லது அப்பொருளைக் காணும் தகுதியோடு அவர் இல்லை என்பது மற்றொரு அர்த்தம். நீங்கள் காணும் இடத்தில் கடவுள் இல்லையா? அல்லது கடவுளைக் காணும் தகுதி உங்களுக்கு இல்லையா? என்பதுதான் இப்போதைய பிரச்சினை. இவ்விரண்டில் எது உண்மையாக இருந்தாலும், “கடவுளை இல்லை” என்று நீங்கள் சொன்னதால், அந்த ஒன்றே கடவுள் இருக்கிறார் என்பதற்குச் சான்றாகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சுத்திச் சுத்தி வந்தீங்கோ**

**7. கேள்வி:-** பெய்யெனப் பெய்யும் மழை என்பது நடக்கக்கூடிய காரியமா? வள்ளுவரைப் போய்ப் பொய்யாமொழிப் புலவர் என்கிறார்களே?

**பதில் :-** உங்களின் வாதம் தவறானது. குறளின் பாதி அடியை எடுத்து வைத்துக்கொண்டு, வள்ளுவரைப் பொய்யராக்கப் பார்க்கிறீர்கள். பெய்யென்றதும் மழை பெய்ய வேண்டுமானால் அதற்கான நிபந்தனையை முதல் வரியில் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். தெய்வத்தையும் தொழாது தன் கணவனையே தெய்வமாக நினைத்துத் தொழுகிறவள் சொன்னால் அவள் சொன்னதும் மழை பெய்யும் என்பதுதான் வள்ளுவரின் குறள் தரும் முழுக்கருத்து. முதலில் அப்படி யாரும் பெண்கள் இங்கு இருக்கிறார்களா? என்று தேடிப்பாருங்கள். இருந்தால் அவர்களைக் கொண்டு மழையைப் பெய்யச் சொல்லிப் பாருங்கள். இந்தச் சோதனையின் முடிவுதான், வள்ளுவர் பொய்யரா? நீங்கள் பொய்யரா? என்று வெளிப்படுத்தும்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- “கணவனைக் கடவுளாய் நினைப்பதோ? மனுசனா நினைச்சாலே பெரிய காரியம். ஹி..ஹி.. வாரிதியாருக்கு இப்பத்த உலகம் தெரியல!”**

# உலகின் மிகக் கொடூரமான சர்வாதிகாரி



# இடி அமீன்



இடிஅமீன் உலகின் அதிபயங்கர கொடுங்கோலர்களில் ஒருவர். 1971 முதல் 1979 வரை உகாண்டாவை ஆட்சி செய்தார். இடி அமீன் 1924 அல்லது 1925 இல் பிறந்திருக்கலாம் என சொல்லப்படுகிறது – மே மாதம் 18ஆம் திகதி , 1928 இல் பிறந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது . இவரது ஆட்சி மிகவும் பயங்கரமானது .

உகாண்டா நாட்டில் 1971ஆம் ஆண்டில் இராணுவப்புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தவர் இடி அமீன். சர்வாதிகார ஆட்சி நடத்தினார். உகாண்டா தான்சானியா போருக்கு பிறகு, 1979ஆம் ஆண்டு லிபியாவுக்கு தப்பிச் சென்றார். அங்கிருந்து 1981ஆம் ஆண்டு சவுதிஅரேபியா சென்றார். 2003ஆம் ஆண்டு இறந்தார். சர்வாதிகாரி இடிஅமீன் நாட்டை விட்டு பாதுகாப்பாக வெளியேற அப்போது வசதி செய்து கொடுக்கப்பட்டது.

உலகின் மிக கொடூரமான சர்வாதிகாரி. ஏனைய சர்வாதிகாரிகளுக்கெல்லாம் நாடு, இனம் என ஏதோ ஒரு நோக்கம் இருந்தது. ஆனால் எந்த நோக்கமும் இல்லாமல் வெறும் மனித வேட்டை மட்டுமே ஆடிய கொடிய மனிதன் தான் இடி அமீன் .

தனது எட்டு ஆண்டுகால ஆட்சியில், இதற்கு முன் கேள்விப்பட்டிராத வகையில் கொடூரமாக நடந்து கொண்ட இடி அமீன், நவீன வரலாற்றின் கொடுங்கோல் ஆட்சியாளர்களின் முன்னணியில் இருக்கிறார்.

6.4அடி உயரம்,135 கிலோ நிறை, கருநிறத் தோற்றம் கொண்ட இடி அமீன் இளமையில் குத்துச்சண்டை வீரன். இவருக்கு வெளியே தெரிந்த வரை 6 மனைவிகள். குழந்தைகள் எண்ணிக்கை மட்டும் 43 முதல் 54 இருக்கும் என்கிறார்கள்.

1971 முதல் 1979 வரை உகாண்டாவின் ஜனாதிபதியாக இருந்த இடி அமீன் சர்வாதிகாரத்தின் ஆணிவேர் என்று கூறப்படும் அளவுக்கு கொடுமையானவராக இருந்தார்.

1971 ஆம் ஆண்டிற்கான கொமென்வெல்த் மாநாடு சிங்கப்பூரில் கூடியது. அதில் கலந்துகொள்வதற்காக ஜனவரி மாதம் 25 ஆம் நாள் சிங்கப்பூருக்கு கிளம்பினார் ஒபெடோ. இதுதான் சமயம். ஒரு புரட்சி. மொத்த இராணுவமும் கைகளுக்குள். தன்னால் பதவியேற்றவர்கள் தனக்கு உதவ மாட்டார்களா? உதவினார்கள். அன்றைய இரவே உகாண்டாவின் தலைநகர் கம்பாலா விமான நிலையத்தில் முதல் குண்டுவெடித்தது. இராணுவம்அணிவகுக்க நேராகச் சென்று அதிபர் கதிரையில் உட்கார்ந்து கொண்டார் அமீன்.


அமீன் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் தேர்தலை நடத்தவிருக்கிறேன் என அறிவித்தார். ஆனால் அப்படியொன்று நடக்கவே இல்லை. இராணுவ தலைமைப்பொறுப்பையும் தானே கவனிக்கத் தொடங்கினார். அரசாங்க மேல்மட்ட தலைவர்கள் அனைவரும் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். அந்தப்பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டது. ஒட்டுமொத்த அரசாங்கமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதிபர் எடுக்கும் முடிவே இறுதியானது. அதுவே சட்டம்.

பிற இனக்குழுக்கள் புரட்சியில் ஈடுபடாமல் இருக்க அதன் தலைவர்களை கொல்லும்படி உத்தரவிட்டார் அதிபர். ஆட்சியின் கொலையுதிர்காலம் அப்படித்தான் துவங்கியது. தனக்கு எதிராக கேள்வி எழுப்பும் எவரையும் விட்டுவைக்கக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தார் அமீன். வியாபாரிகள், மாணவர்கள், பத்திரிக்கையாளர்கள், முன்னாள் அரசியல்வாதிகள் என அமீனுக்கு எதிரானவர்கள் வேட்டையாடப்பட்டனர்.



1972இல் ஆசியர்கள் அனைவரையும் நாட்டை விட்டு இடி அமீன் வெளியேற்றிய போது கிட்டத்தட்ட 70,000 மக்கள் வெளியேறினர். பொருளாதாரம் கடும் வீழ்ச்சி அடைந்தது. 1976இல் ஒரு இஸ்ரேல் விமானம் கடத்தப்பட்டபோது, கடத்திய தீவிரவாதிகளை மாளிகைக்கு அழைத்து இடி அமீன் விருந்து கொடுத்தமை ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இடி அமீன் ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவர் இடி அமீனை பற்றி எழுதிய புத்தகத்தில் யாருக்கும் தெரியாத விடயங்களை குறிப்பிடுகிறார். அதில் மனித மாமிசத்தின் ருசியைப்பற்றி பல அமைச்சர்களிடம் இடி அமீன் பேசியதாகவும், அதை சிறுத்தை மற்றும் குரங்கு மாமிசத்தோடு ஒப்பிட்டதாகவும் அவர் சொல்கிறார்.



இவரின்மனைவிகளின் முன்னாள் காதலர்களை எல்லாம் கொன்றுவிட்டு அவர்களின் மனைவிகளை தனக்கு இரையாக்குவதே இடி அமீனின் வேலை என்று கூறுகிறார்கள். ஒரு முறை அவரின் 5 ஆவது மனைவி இடி அமீனின் ரகசிய அறையை எப்படியாவது பார்க்க வேண்டும் என்று விரும்பி உள்ளே நுழைந்த போது பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானாள், அவளது காதலன் தலையைவெட்டி குளிர்சாதன பெட்டிக்குள் இடிஅமீன் வைத்திருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள்.

நாட்டின் தலைநகர் கம்பலாவின் அரசு மருத்துவமனையில் அடிக்கடி சடலங்களின் உறுப்புகள் காணாமல் போவது சகஜமாம். இடி அமீனால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களுடன் சிறிது நேரம் இடி அமீன் தனிமையில் இருப்பார் என கூறப்படுகிறது.

இடி அமீனால் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 3,00,000இற்கும் அதிகமாகும். 1979இல் ஏற்பட்ட மக்கள் புரட்சியால் நாட்டை விட்டு லிபியாவிற்கு ஹெலிக்கொப்டரில் பறந்து 10 ஆண்டுகள் அங்கு இருந்த பின் மீண்டும் நாடு திரும்ப முடியாமல் சவுதி அரேபியாவுக்குள் தஞ்சம் அடைந்த இடி அமீன். 78ஆவது வயதில் பல மாதங்கள் கோமாவில் கிடந்து இறக்கும் தறுவாயில் கூட உகாண்டா வருவதற்கு அப்போதைய அரசு மறுப்பு தெரிவித்தது. கொடூரம் என்ற வார்த்தைக்கு ஒரு உருவம் குடுத்தால் அது இடி அமீன் எனலாம்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 204

**524. தொடர்ந்தும் புலம்பெயர் அமைப்புக்கள் சுமந்திரனை துரோகி என்று பலமராக சாணி அடிக்கின்றனவே?**

அவர் துரோகியா, இல்லையா என்ற அடைமொழி ஆராய்வில் ஈடுபடுவதில் பிரயோசனம்இருப்பதாக எனக்குத்தோன்றவில்லை. பல விமர்சனங்கள் இருக்கும். ஆனால் கோம்பை வண்டிகளை இழுக்கும் மாடுகள் தங்கள் நடையை தொடர்ந்து கொண்டே இருக்கவேண்டும். இதனை இப்பொழுது பார்க்கும்போது



இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி மன்னன்

முன் சில சமயங்களில் "அவர்" விடுதலைக்கு துரோகி என்ற பட்டம் சூட்டி அழிக்கப்பட்டதும், வேறு சிலர் அப்படிப் பரப்புரைகளுக்கு ஆளானபோது அவர்களோடு சம்பாஷித்தவையைத்தான் நினைவு கூருகிறேன்.

புனித தோமஸ் பெக்கற் (St.Thomos Becket) 1162 லிருந்து 1170 வரை லண்டன் கான்ரபரியின் (Canterbury) பிரதம நிதி அதிகாரியாக பணியாற்றி பின்னர் பேராயராக பதவியிலிருந்து கொலை செய்யப்பட்டார். அவர்தனக்கு துரோகியாகி மாறி செயல்படுகிறார் என மன்னர் அபிப்பிராயப்பட்டதே அந்த கொலைக்குக் காரணமாக அமைந்தது. அவரது மரணத்தின் பின் அவர் புனிதராகவும் மாவீரனாகவும் (Martyr) கத்தோலிக்க, அங்கிலிங்கன் கிறிஸ்தவ பரப்புக்கள் இரண்டினாலுமே ஏற்று கௌரவிக்கப்படுபவர். தொடக்கத்தில் இங்கிலாந்து மன்னன் ஹென்றி ii நண்பனாக வாழ் வைத் தொடங்கி, மன்னனின் ஆழ்ந்த நம்பிக்கையிலும் அவரது நிர்பந்தத்திலும் கான்ரபரி பேராயர் பதவியை ஏற்று, அதன் பணிகளில் இதய சுத்தியோடு ஈடுபட்டமையால் மன்னரின் சில நடவடிக்கைகளுக்குத் தனது மனசாட்சிக்கு எதிராக ஆதரவு கொடுக்கவில்லை. இதனால் அவர்களுக்கு இடையே எழுந்த கசப்பும் தோமஸிற்கு வளர்ந்த மதிப்பும் அவரது கொலையில் முடிந்தது. அதன் சந்தேகங்களும் குற்றங்களும் மன்னரிலேயே சுமத்தப்பட்டன.

ஆகவே அங்கிகளை அணிந்து கொண்டு சேவைக்கென வந்துவிட்டால் நண்பனோ, துரோகியோ எந்தப் பட்டம் சூட்டப்பட்டாலும் மனசாட்சியுடன் தன் கடமையை புனிதர் பெக்கற் மாதிரி செய்வதுதான் முக்கியம் என அவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறேன்.

சில அமைப்புக்கள் இப்படி துரோகி என கூக்கிரலிட, இன்னும் பலர் அப்படி கூப்பிடுகின்றவர்கள் பற்றி பலவாறாக ஊடகங்களில் பதிவிடுகிறார்கள். அப்படியாயின் இவைகளில் எங்கே கோடு கீறுவது?

**525. அந்தப் பதிவுகள் என்ன?**

எனக்கு அனுப்பப்பட்ட பலவற்றில் சிலவற்றை சுருக்கி தருகிறேன். இவை எனது அபிப்பிராயங்கள் அல்ல.

"ஈழத் தமிழர்கள் தங்கள் மண்ணில் நிம்மதியாக வாழ்ந்தால் தாங்கள் புலம்பெயர்தேசத்தில்வேலைக்குப்போகவேண்டிய சூழல் வருமென்பதாலும், உதவுதல் என்னும் பெயரில் புலி சின்னம் அடிச்சு பணம் சேர்க்க முடியாது என்பதாலும், எப்பவும் ஈழத்தில் பிரச்சினையைத் தீர்வுக்கு கொண்டுவரக்கூடாது என்பதில் இந்த சீன் தமிழ் தேசிய கோஷ்டி தெளிவாயிருக்கு.

சரி, சுமந்திரனை எதிர்க்கிற நீங்கள் தமிழர் தீர்விற்கு வைத்திருக்கும் வழிகள் என்ன? இன்றுவரை நீங்கள் செய்த அரசியல் முன்னெடுப்புக்கள் என்ன? இப்படி கேள்விகேட்டால்ஒருசூந்தலும்கிடையாது."

"இவ்வாறு தமிழர் பிரச்சினையை யார் எல்லாம் அக்கறை கொண்டு உலகத்துடன் பேசி ஒரு நிரந்தர சமாதானத்துக்கு வழிகளைத் தேடும்போதெல்லாம் குழப்பி அடித்து இல்லாமல் ஆக்குவதில் முதல் ஆள்களாக நிற்பவர்கள் இவ்வாறான தமிழ்த் தேசியம் பேசும் புல்லுருவிகளே. புலிகளின் இறுதிப் பேச்சு மேசையிலும், இல்லை அடிப்பம், நாங்கள் கப்பல் அனுப்புறம், அமெரிக்காவை அனுப்புவம் என எந்தத் தீர்வுக்கும் போகாமல் தடுத்ததும்இதேபுலம்பெயர்தேசியங்களே.

ஆக, புலிகளின் இதயமாக இருந்த கேபி முதல் படையணி தளபதிகள் வரை ஊரில் சிவனேயென இருக்க, புலம்பெயர் தேசத்தில் புலிக்கு காசு சேர்த்து, புலிக்காசில் வாழும் - இப்பவும் புலியை வைச்சு வாழும் - அல்லக்கைகள் சுமந்திரன் என்ன, சுண்ணாம்புச்சந்திரன் வந்தாலும் இவ்வாறான ஆர்ப்பாட்டம், புரட்சி, எழுச்சியென மக்களை உசுப்பி விட்டுக் குளிர்காயும் வேலையை செய்தபடியே தான் இருக்கும்."

"ஆதலால், நல்லாட்சி அரசை விமர்சனம்செய்தும், ஆட்சியைக் கோட்டாவிடம் கொடுத்துவிட்டு நாங்கள் வந்தால் ஐ.நாவில் மின்சாரக் கதிரையில் ஏற்றுவோம் எனச்சொல்லிநாடாளுமன்றுபோனகஜா, குதிரை கூட்டணி இன்றைக்கு மாவீரர்கள் நினைவேந்தல் செய்யமுடியாமல் போனதுக்கு காரணமான முதல் சூத்திரதாரிகள். ஆனால் அவர்கள் இந்த சீன் தேசியங்களுக்கு அடுத்த தமிழரின் வழிகாட்டிகள்."

"ஆக ஐயா பாலசிங்கம் சொன்னது போல சிங்களவனுடன் கதைச்சு எமக்கான தீர்வை வாங்கலாம். ஆனால் அங்கிருக்கும் சிங்களவனுக்கு ஆதரவாக மறைமுகமாக இயங்கும் தமிழன் விடான். இதுதான் உண்மை. தேசியம் பேசுறவன் எல்லாம் மக்கள் அக்கறையில் இல்லை. அவனுக்கு தங்கள் பிழைப்பில் மண் விழுந்திடக்கூடாது என்னும் பேராசையில் வாறவன், போறவனையெல்லாம் துரோகிகள் எனச் சொல்லி சல்லிய நிறைக்கும் சில்லறை கோஷ்டிகள் என்பதை மக்கள் உணர்ந்து புறக்கணித்தால் நாளை கூட தமிழர்களுக்கு ஒரு விடிவுகாலம் வரலாம்." - இது ஒரு தமிழ் பரப்பில் அரசியல் போக்கு.

**526. மற்ற அரசியல் என்றால் என்ன?**

"ஆரம்ப முதலே அறிவுபூர்வமான பேச்சுவார்த்தைக்கு போய், பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முற்பட்ட அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் முதற்கொண்டு மாற்று இயக்கத் தலைவர்கள் முதல் எல்லோரையும் துரோகியாக்கி, ஆயுத போராட்டத்தை தமிழ் மக்கள் மீது பலவந்தமாக திணித்து, முள்ளிவாய்க்காலில் அந்த அப்பாவி மக்களை சிங்கள படைகளுக்கு வேள்வியாக்கி பின்னர், தங்கள் அழிவு வரும்போது திம்பு உடன்படிக்கை, ஒஸ்லோ உடன்படிக்கை, இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13 ஆவது திருத்தச்சட்டம் எல்லாத்தையும் ஏற்கிறோம் என்று ஒப்பாரி வைத்து அழிந்து நாசமான ஒரு கொள்கையின் வழிவந்த பினாமிகளிடம் வேறு எதையும் எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.".

- இவை எல்லாம் தமிழ் தேசியப் பரப்புக்குள்ளே எழுகின்ற வசை பாடல்கள். அந்தப் பரப்பை கடந்து இணைந்த, அன்றில் இணக்கமான அரசியலை நடத்துவோரின் பதிவுகள் இன்னும் பல. அவை தேசியத்தை கேள்விக்குறியாக்கி, அதிகாரத்திலிருப்பவர்களை துதிபாடுபவை.

இவை இன்றும் தமிழ் மக்களில் ஊறியிருக்கும் அரசியல் சுயநலன்களைப் பிரதிபலிக்கின்றன. இவையெல்லாம் தனிமனிதர்களின் சுயநலம், பொது நலத்திற்கானவையாகப் படம் பிடிக்கப்படுகின்றன. தமிழ் மக்களுக்கான பொது நலத்திலுள்ள சுயநலமாக இவற்றைக் கருத முடியாது, சிங்களமக்களிடையே எத்தனையோ பேர் சுயநலமின்றி தமிழ் மக்களுடன் அன்பாகவும் பாசமாகவும் பழகுகின்றார்கள். அவர்களுக்கிடையே இருக்கும் திருமணப் பந்தங்களின் அளவு இந்திய வம்சாவளியினரோடு கூட இருப்பதில்லை. ஆனால் பெரும்பான்மை சிங்கள மக்கள்,





புனித தோமஸ் பெக்கற்

தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் என்றால் அதில் தங்களது பொது நலத்தில் சுயநலமாக இருப்பார்கள். அதுதான் வித்தியாசம். சந்தர்ப்பங்கள் வரும்போதெல்லாம் இனப்பிரச்சினைக்கு தீர்வு சார்வக்கட்சிக் கூட்டங்களின் ஒற்றுமையின் பேரில்தான் செய்ய முடியுமென்று வழுகிச் செல்வதற்கு அவர்களிடம் இருக்கும் இந்த சுயநல ஒற்றுமையின் நம்பிக்கைதான் அடிப்படை. இதுதான் வித்தியாசம்.

22.ஜனவரி 2000, மெல்போர்னில் நடந்த எனது மகளின் பரதநாட்டியசரங்கேற்றத்தின் கையேட்டில் ஒரு குறிப்பு எழுதியிருந்தேன். அது பின்வருமாறு அமைந்திருந்தது:

"எந்தவொரு தேசிய இனத்தினது சரித்திரமும் அந்த இனம் தோற்றுவிக்கும் மகத்தான பிள்ளைகளாலேயே எழுதப்படுகிறது. தமிழ்தேசியத்தின்வளர்ச்சி, உயர்வு, அறுவடை என்ற எல்லாமே ஒருவிதத்தில் இன்று வெளிநாடுகளில் பரவி வாழும் தமிழரோடு பின்னி பிணைந்துள்ளது. அவர்கள் தோற்றுவிக்கும் பிள்ளைகள் தமது மொழி, கலாச்சாரத்தில் காட்டும் ஆர்வத்தை ஒட்டியே தமிழன் தமிழனாக வாழ்கிறானா, அவன் தன் மண்ணை மறந்து விட்டானா என்பதை சொல்லும். அந்த வகையில் தம் மண்ணின் பாசத்திற்காக வித்தாகும் புதல்வர்கள் போல, விதேச கலாச்சாரத்தின் திணிப்பின் இடையிலும்தமிழ்மொழியை, கலையை கற்று, அதனை அரங்கத்திற்கு அழைத்து வரும் ஒவ்வொரு பிள்ளையும் தமிழ் தேசியத்தின் சரித்திரத்தின் ஒரு படியை ஏறுகிறார்கள்.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உலகெங்கிலும் பரந்து கிடந்த யூதர்கள் தமது நித்திய பிரார்த்தனையில் இஸ்ரேலை மீட்கவேண்டியும் ஜெருசேலத்தை கட்டியெழுப்புவது பற்றியும் தியானம் செய்வார்கள். தமது விழாக்காலங்களில் ஆலிங்கனம் செய்யும் பொழுது 'அடுத்தவருடம்ஜெருசேலத்தில்சந்திப்போம்' என்று சொல்வார்கள். அப்படியே, இப்படியானகலைவிழாக்களில்எமது தேசியத்தை உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்து, எமது பிள்ளைகளை ஒரு நாள் இந்த கலைகளை தம் மண்ணிலேயே நடாத்துவார்கள் என உறுதி கொள்வோம்

"இந்த அரங்கேற்றம் இன்னுமொரு பிள்ளைக்கு உந்துகோலாகட்டும் என்று ஆசை கொள்வோம்." - என்று அமைந்தது

2000 இற்குப் பின்பும் தமிழ் மக்கள் புலம்பெயர் நாடுகளில் குடியேறி பலமான புலம்பெயர் அத்திவாரமாக, நாட்டிலிருந்த தமிழ் மக்களுக்கு இருந்தார்கள். அவர்களது இறைமையை மீட்டெடுப்பதில் உறுதியாக இருந்தார்கள். ஆனால் இன்று புலம்பெயரில் நடப்பதைப் பார்த்தால் அந்த உறுதிகளில் "தமிழ் ஈழம் காண்போம்" என்ற ஆலிங்கனம் இல்லாமல், ஒவ்வொருவனையும் அங்கு செல்ல விரும்புபவனையும், இழுத்து விழுத்துபவர்களாகவும், அதை வைத்து பேசுபவர்களாகவும் மிளிர்கிறார்கள்.

(வளரும்...)



# கிண்ணியா – குறிஞ்சாக்கேணிக்கு 9 மாதங்களுக்குள் பாலம் அமைப்பு

## நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் உத்தரவாதம்

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிக்கமைய, அனைத்து வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் உரிய காலத்துக்குள் செய்துமுடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறி தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்துக் கிளை வீதிகள் மற்றும் உள்நுழைவு வீதிகளையும் அபிவிருத்தி செய்து, அவற்றை பிரதான வீதிக் கட்டமைப்புடன் தொடர்புபடுத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

'இலங்கையின் வீதிக் கட்டமைப்பின் புதிய தகவல்கள்' என்ற தலைப்பில், வியாழக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே, அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவின் வழிநடத்தலில் இடம் பெற்ற இந்த ஊடகச் சந்திப்பு, வீடியோ தொழில்நுட்பத்தில் நடத்தப்பட்டதோடு, இதில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைச் சேர்ந்த ஊடகப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். 2024 ஆம் ஆண்டுக்குள், மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலுக்குக் காரணமாகவுள்ள அனைத்துச் சந்திகளையும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய சமிக்ஞை விளக்குக் கட்டமைப்பைப் பொருத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இடைஞ்சல்கள் உள்ள இடங்களில் மேம்பாலங்கள் அமைத்தல் போன்ற மாற்று வழிகளைக் கையாண்டு, போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பிரதான வீதிகளுக்கு அருகில் மாற்று வீதிகளை நிர்மாணிக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளன என்றும், செயலாளர் குறிப்பிட்டார். கொழும்பு – புத்தளம் வீதியை அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், சிலாபம் நகரம் மற்றும் அந்த வீதியின் ஒரு பகுதி மழைநீரால் பாதிக்கப்பட்டுள்ளதால், அதனைத் தடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீர், மின்சாரம், டெலிகொம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும் போது, நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்காக இதுவரை காணப்பட்ட முறைமைக்குப் புறம்பாக, உரிய நிறுவனங்களுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை பேச்சுகளை நடத்தி, புதிய உத்திகளைக் கையாளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஏனைய நிறுவனங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்காக, வீதியின் இருபுறமும் இரண்டு மீற்றர் பகுதியொன்றை ஒதுக்கியவாறே வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன் தெரிவித்தார். திருகோணமலை – கிண்ணியா, குறிஞ்சாக்கேணி களப்பில் இழுவைப் படகொன்று விபத்துக்குள்ளாகி, பாடசாலை மாணவர்கள் உட்பட அறுவர் உயிரிழந்த சம்பவம் மிகவும் வேதனைக்குரியது என்று தெரிவித்த செயலாளர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம், 9 மாதங்களுக்குள் குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## மட்டு. நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் நிலவுகின்றது.

இலங்கைக்கு தென்கிழக்காக தற்போது நிலை கொண்டுள்ள கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழைபெய்து வருகின்றது. இதன் காரணமாக மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் பெய்து வரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையுடன் போக்குவரத்து செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையேற்றபட்டுள்ளதுடன் வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளமையைக் காணமுடிகின்றது.

## நற்பண்புள்ள உயர்ந்த அதிபர் சுப்பிரமணியம் செல்லத்துரை!



அன்பு, நீதி, உண்மை, நேர்மை, கருணை, நடு நிலைமை, கரிசனை, சாந்தி, அறம், ஒப்புரவு, தியாகம், நன்னடத்தை போன்ற விழுமியப் பண்புகளைக் கொண்ட, இளவாலை என்னும் ஊரில் பத்தாவத்தை எனும் சிற்றூரில் பிறந்து வளர்ந்த அமரர் சுப்பிரமணியம் செல்லத்துரை அதிபரை நான் குழந்தைப்பருவத்தில் இருந்து, சிறுவனாக, மாணவனாக அவரிடம் பலவற்றை என் வாழ்விற்கு கற்றுக்கொண்டேன்.

இந்துக்கள், கத்தோலிக்கர்கள் என்ற மதபேதமின்றி சகோதர உணர்வுடன் வாழ்ந்து வருகின்ற இளவாலைக் கிராமத்தில், ஏடு தொடக்குவது அவ்வூர் மக்களின் பாரம்பரியங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. அன்றைய தினம் நான் எனது தந்தையுடன் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய பாடசாலைக்குச் சென்றபோது ஏழூர் மண்டபத்தில் தமிழர் பண்பாட்டில் வேட்டி, தலைப்பாகை அணிந்த வண்ணம் எனக்கு ஏடு தொடக்கி வைத்து கல்விக் கண்ணைக் காட்டியவர் எங்கள் அதிபர்.

அறிவும், திறமையும் மட்டும் கொண்ட மனிதர்களை அல்ல அறிவும், திறமையும், நற்பண்புகளும் கொண்ட பரிபூரணமான மனித சமூகத்தை உருவாக்கும் கல்விச்செயற்பாடுகள் தற்காலத்தில் முனைப்புப் பெற்று வருகின்ற வேளையில், அமரர் செல்லத்துரை அதிபர் இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே, தான் அதிபராகப் பணியாற்றிய கல்விக்கூடத்தில் இத்தகைய பண்புகளை வளர்த்தெடுத்தார். தன்னுடைய கடமைகளில் பிரமாணிக்கமும், அயலவருக்கு எப்போதும் உதவிபுரியும் ஆர்வமும் அவரின் வாழ்வில் இழையோடிக் கொண்டிருந்தது. எடுத்த ஒரு காரியத்தை செவ்வனே செய்து முடிக்கும் வரை அயராது உழைக்கும் மனப் பக்குவத்தையும், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, இடப்பெயர்வுகள் மத்தியிலும் பாடசாலையின் வளர்ச்சிக்காக கடினமாக உழைத்தது இவருடைய சிறந்த தலைமைத்துவமாகும்.

மேலும் மனித விழுமியப் பண்புகளை மாணவச் செல்வங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளான, விளையாட்டுக்கள், கலைநிகழ்வுகள், கல்விச்சுற்றுலாக்கள், இலக்கிய மன்றங்கள், காலைக்கூட்டம், சாரணர் குழு, பாசறைகள், சிரமதானம், சமூக நலன்புரி சேவைகள், சமய கலாசார நிகழ்வுகள் என்பவற்றின் ஊடாக மாணவர்கள் நடைமுறை ரீதியாக விழுமியங்களைப் பெற்றுக் கொள்ள, களம் அமைத்துக் கொடுத்த நல்லாசான். இதற்கு சான்று இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இன்று உலகெங்கும் நல்ல மனிதர்களாக உயர்ந்து நிற்கின்றார்கள். மாணவர்களின் நல்வாழ்வுக்காக, உயர்வுக்காக உழைத்த உத்தம அதிபரின் ஆன்மா இறைவனில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட்தந்தை எ.எட்வினாதன்**
**மாணவன்**

# ஜப்னா கிங்ஸ் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக புஷ்பகுமார நியமனம்



லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் ஜப்னா கிங்ஸ் அணியின் சுழல் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக, முன்னாள் இலங்கை வீரரும் தற்போதைய குவைத் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளருமான முதுமுதலிகே புஷ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜப்னா அணியின் சுழல் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக சசித் பத்திரன பணியாற்றியிருந்தார். ஆனால், அவர் தற்போது இலங்கை 19 வயதுக்குட்பட்டோர் அணியின் சுழல் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றுகின்றமையால் அவருக்குப் பதிலாக புஷ்பகுமாரவை அணி நிர்வாகம் இணைத்துக்கொண்டுள்ளது.

முதுமுதலிகே புஷ்பகுமாரவின் பயிற்றுவிப்பின் கீழ், குவைத் அணி சிறந்த முன்னேற்றத்தை பெற்று வருகின்றது. 2019 ஆம் ஆண்டிலிருந்து குவைத் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டு வரும் இவரது காலப்பகுதியில், குவைத் அணி ஆசியக் கிண்ணத்துக்குத் தகுதிபெற்றிருந்ததுடன், ஆசிய மேற்குப் பிராந்திய சம்பியன்ஷிப்பில் இரண்டாவது இடத்தையும் பிடித்திருந்தது. இலங்கையின்கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்தின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக 9 ஆண்டுகள் செயற்பட்டுள்ள அனுபவத்தையும் புஷ்பகுமார கொண்டுள்ளார்.

ஜப்னா கிங்ஸ் அணியில், ஐ.சி.சி. ரி – 20 பந்து வீச்சுத் தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ள வனிந்து ஹஸரங்கவுடன் இலங்கை வீரர் மஹீஷ் தீக்ஷனவும், வளர்ந்துவரும் இளையவரான வியாஸ்காந்த்தும் இணைக்கப்பட்டுள்ளனர். எனவே, முதுமுதலிகே புஷ்பகுமாரவின் பயிற்றுவிப்பின் கீழ் ஜப்னா கிங்ஸ் அணியின் சுழல் பந்துவீச்சு மேலும் பலமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவுக்கு எதிராக வலுவான நிலையில் நியூசிலாந்து






## விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய பங்களாதேஷ் முஸ்பிகுர், லிடொன் ஆட்டத்தால் மீண்டுவந்தது

பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சிட்டகொங்கில் நடைபெற்றுவருகிறது.

இந்தப் போட்டியின் முதல் நாள் நிறைவில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ் அணி, 4 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்பத்தில் அடுத்தடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களை மட்டும் எடுத்துத் தடுமாறிக்கொண்டிருந்த பங்களாதேஷ் அணியை முஸ்பிகுர் ரஹிம் 82 ஓட்டங்களையும், லிடொன் தாஸ் 113 ஓட்டங்களையும் எடுத்து வலுவான நிலைக்குக் கொண்டுவந்தனர்.

ஷாஹீன் ஷா அப்ரிடி, ஹசன் அலி, பஹீம் அஸ்ரப், சஜிட் கான் நால்வரும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தனர்.

இந்திய – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கான்பூரில் நடைபெற்றுவருகிறது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 345 ஓட்டங்களை எடுத்தது. தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட ஸ்ரேயாஸ் ஐயர் 105 ஓட்டங்களை எடுத்தார். சுப்மான் கில் 52, ரவீந்திர ஜடேஜா 50, அஸ்வின் 38 ஓட்டங்களைப் பெற்றனர். நியூசிலாந்து அணியின் டிம் சௌத்தி 5, ஜேமிசன் 3, அஜாஸ் படேல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி இன்றைய இரண்டாவது நாள் ஆட்டம் நிறைவடையும்போது விக்கெட் இழப்பின்றி 129 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. வில் யங் 75 ஓட்டங்களுடனும், டொம் லதாம் 50 ஓட்டங்களோடும் களத்திலிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தீருவிலில் நினைவேந்தலுக்கு தடைகோரும் மனு நிராகரிப்பு

## பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறை தீருவில் திடலில் மாவீரர் நினை வேந்தல் நடத்துவதற்கு தடை கோரிய பொலிஸாரின் மனு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தீருவிலில் நினைவேந்தலை நடத்த அனு மதிக்க முடியாது என்று வல்வெட்டித் துறை நகரசபை அறி வித்திருந்தது. நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட மேன் முறையீட்டுக்கு அமைவாக தடைகள் தொடர்பிலான கட்ட ளைகள் திருத்தி அமைக்கப்பட்ட நிலையில், தீருவில் திட லில் நினைவேந்தலை முன்னெடுக்க நகரசபை அனு மதித்திருந்தது.

இந்நிலையில் இதனை எதிர்த்து அனுமதி வழங்கக் கூடாது என்று கட்டளை வழங்குமாறு பொலிஸார் பருத் தித்துறை நீதிமன்றில் சமர்ப்பணம் செய்திருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி தடை செய்யப்பட்ட இயக் கத்தை அடை யாளப்படுத்தும் வகையிலான செயற்பாடு களை முன்னெடுக்க முடியாதேயன்றி, இறந்தவர்களை நினைவுகூர்வதைத் தடுக்க முடியாது என்று தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்.

எனினும், தீருவில் மைதானத்தில் பெரும் எண்ணிக் கையில் படையினர் குவிக்கப்பட்டிருக்கின்றமையைய டுத்து அங்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது சாத்தி யமா என்பது தெரியவில்லை.

இதேசமயம் –

நினைவேந்தலுக்கு விடுக்கப்பட்ட தடையை நீக்கு மாறு கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப் பிக்கப்பட்ட மனு சாதகமான முடிவைத் தரவில்லை என சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கோயில்கள், தேவாலயங்களில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் கொடிகள், அடையாளங்கள் இன்றி நினைவு கூரல் வழிபாடுகளை முன்னெடுக்க அனுமதி உண்டு என்ற சாரப்பட தடை உத்தரவில் சில தளர்வுகளை ஏற்படுத்துவதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் இணங்கிய தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கேக் வெட்டும் படத்தை அனுப்பினாராம் தமிழ்த் தாதிய மாணவன் மீது தாக்குதல்!

## கடற்படை தாதிய மாணவன் அடாவடித்தனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.26

பிறந்த தினத்தை நினைவூட்டும் படம் அனுப்பிய கோபத்தில் கடற்படை தாதிய மாணவன் தமிழ் தாதிய மாணவன் மீது சரமாரித் தாக்குதலை நடாத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையின் தாதிய பயிற்சிக் கல்லூ ரியில் பலர் கல்வி கற்று வரும் நிலை மையில், அங்கே கடற்படையைச் சேர்ந்தவர்களும் தாதிய பயிற்சியை பெற்று வருகின்றனர்.

லண்டனில் இலங்கைத் தூதரகம் முன் போராட்டம் நடத்திய ஈழத்தமிழர் களைப் பார்த்து கழுத்தை அறுப்பேன் என சமிக்ஞை காட்டிய இராணுவ அதிகாரியின் படத்தை கடந்த மே-19 அன்று (முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் காலத்தில்) மேற்படி மாண வர்களில் கடற்படை தாதிய மாணவர் கள் தமிழ் தாதிய மாணவர்களிற்கு அனுப்பிக் கோபத்தை ஏற்படுத்தி யிருந்தனராம்.

இப்படி சீற்றத்தை ஏற்படுத்திய கடற்படைத் தாதிய மாணவர்களின் இலக்கத் திற்கு பிறந்த நாளிற்கு கேக் வெட்டும் படத்தை தமிழ் தாதிய மாணவன் இன்று அனுப்பியுள்ளான். இதனால் ஆத்திரமடைந்த கடற்படை தாதிய மாணவன், தமிழ்தாதிய மாண வனைக் கடுமையாகத் தாக்கியுள் ளார்.

இந்த விடயம் வைத்தியசாலை நிர் வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட போது “நாட்டின் சூழலில் நீங்கள் ஏன் கேக் வெட்டும் படத்தை இன்று அனுப்பினீர்கள்?'' எனக் கேட்டு, வேறு நடவடிக்கை ஏதும் எடுக் காமல் நிர்வாகம் அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தது எனத் தெரி விக்கப்பட்டது.



# விடுதலையான 23 தமிழக மீனவர்களில் 18 பேர் அதிகாலை சென்னை புறப்பாடு!

## தொற்றுக்குள்ளான ஐவரின் பயணம் தாமதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 23 இந்திய மீனவர்களில் 18பேர் நேற்று அதிகாலை இந்தியா புறப்பட விருந்தனர்.

பருத்தித்துறை கடற்பரப்பிற் குள் இரு படகுகளில் ஊடுரு விய 23 இந்திய மீனவர்களை யும் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் விடு வித்த நீதிமன்றம் அவர்களது படகுகளை அரச உடைமை யாக்கியது தெரிந்ததே.

விடுவிக்கப்பட்ட 23 இந் திய மீனவர்களும் தாயகம் திரும்ப ஏற்பாடுகள் மேற் கொண்ட சமயம் அவர்களில் மூவ ருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. இதனால் எஞ்சிய 20 பேரையும் நேற்று தமிழ்நாட்டிற்கு அனுப்ப ஏற் பாடு செய்யப்பட்டது.

விமானச் சிட்டை எடுப்பதற் காக நேற்றுமுன்தினம் மேற் கொண்ட பி.சி.ஆர் பரிசோத னையில் மேலும் இருவருக்கு கொரோனா உறுதி செய்யப் பட்டது. இதனால் தற்போது 18 பேர் மட்டும் நேற்று நள்ளிரவு 11.50ற்கு புறப்பட்டு அதிகாலை விமானத்தில் சென்னை செல் கின்றனர்.

இவர்கள் இன்று காலை அவர்களது வீடுகளிற்கு சென் றடைவர் என எதிர்பார்க்கப் படுகிறது. கொரோனாத் தொற் றிற்கு இலக்கான ஐவரும் குணமடைந்த பின்னர தாய கம் அனுப்பி வைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

### அரச பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

கொரோனா பரவல் காரணமாகப் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில், நாட்டில் கொரோனா பரவல் குறை வடைந்து வந்த நிலையில் தற்போது பாடசாலைகள் கட்டம் கட்டமாக மீண்டும் திறக்கப்பட்டு, கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

### ‘மொட்டு’ அரசிலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளு மன்றத்தில் நேற்றுமுன்தினம் வெளியிட்ட கருத் துக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே ரொஷான் ரணசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எனக்கு கோள்மூட்டும் அரசியல் செய்ய தெரியாது. மைத்திரி தரப்புக்கு அது பழக்கமாக இருக்கலாம். தங்கள் அடி ‘வேறு மாதிரி’ இருக்கும் என மைத்திரி சொன்னார். சஹ்ரானின் அடியை நாம் பார்த்தோம். மீண்டும் அவ்வாறானதொரு தாக்குதல் இடம் பெறக்கூடாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. அதேபோல் அக்கட்சியில் இருந்து உறுப்பினர்கள் சிலர் வெளியேறுவதால் சிக்கலும் இல்லை – என்றார்.

### யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாணவர்கள் அவரது உருவ படத்திற்கு முன்பாக நேற்று கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை மாவீரர் வாரம் அனுஷ் டிக்கப்பட்டு வரும் நிலையில், யாழ்.பல்கலைக்கழக சூழல் உள் ளிட்ட பகுதிகளில் ஆயுதங்களுடன் இராணுவத்தி னர், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமையுடன், புல னாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப் பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண் டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பிரிட்டன் வெளிவிவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. லண்டனில் வளிவிவகார அமைச் சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புக் குறித்து அமைச்சர் தாரிக் அஹமட் டுவிட் டரில் தகவல் வெளியிட் டுள்ளார்.

“இன்று எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்ததில் மகிழ் வடைகின்றேன்.

“மனித உரிமைகளைப் பேணுவது, பிணக் குக்குப் பின்னரான பொறுப்புக் கூறல், நல்லிணக் கம் ஆகியவற்றோடு அனைத்து சிறுபான்மையினர துடம் உரிமைகளை மதிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் நாங்கள் கலந்துரையாடி னோம்.” – என்று அந்த டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் மட் டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சாணக் கியனும் கலந்து கொண்டார். (உ)

### ‘மொட்டு’வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதை மறந்துவிட்டே அவர்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் களின்போது நாம் பலத்தைக் காட்ட வேண்டும். மாறாக அரசு கவனிப்பதில்லை எனக் கவலையடைந்து கொண்டிருப்பதில் பயன் இல்லை – என்றார்.

### யாழில் 758...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

நேற்றுமுன்தினம் முதல் பெய்த மழை மற்றும் அதிக காற்று காரணமாக 216 குடும்பங்களைச் சேர்ந்த 758 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளமையு டன் காரைநகரில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் தற்காலிகமாக வியாவில் பயிற்சி நிலையத் தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் – என்றார்.

### வீரமறவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர் தேசத்தை காவல் காத்த தெய்வங்களான மாவீரர்களை – வீரப் புதல்வர்களை நினைவுகூர்ந்து பேரெழுச்சியுடன் மாவீரர் நாள் தரணியெங்கும் பரந்து – விரிந்து வாழும் தமிழ் மக்கள் கடைப்பிடிக்க வுள்ளனர்.

இதேவேளை, தாயக மண்ணில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கு நீதிமன்றங்கள் ஊடான தடையுத்தரவைப் பொலிஸார் பெற முயன்ற போதி லும் பல இடங்களில் அந்த முயற்சி பலனளிக்க வில்லை. பல இடங்களில் நினைவேந்தல் தடைக் கான பொலிஸாரின் மனுக்களை நீதிமன்றங்கள் நிராகரித்துள்ளன.

தாயக தேசமான வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் முழுமையாக முடக்கப்பட்ட பின்னர், 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர், மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தி னரால் இடித்தழிக்கப்பட்டன. மாவீரர் நாளை நினைவுகூர முடியாதளவுக்கு நெருக்கடிகளும் – கெடுபிடிகளும் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டன.

நல்லாட்சி அரசு உருவான பின்னர், 2016ஆம் ஆண்டு, பகிரங்கமாக மாவீரர் நாள் நினைவேந்தல் நடத்தப்பட்டது. தமிழீழ தேசத்தில் முக்கியமான மாவீரர் துயிலும் இல்லங்களில், மாவீரர் பெற்றோர்க ளின் கண்ணீர்க் கதறலுடன் நினைவேந்தல் கடைப் பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2017, 2018ஆம் ஆண்டுகளிலும் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் பகிரங்கமாக மாவீரர் நாளைக் கடைப்பிடித்தவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை வைத்தி ருந்தவர்கள் பொலிஸாரால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழீழ தனியரசு அமைப்பதற்காகப் போராடி மடிந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் வாரத்தை 1989ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடித்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படும். நவம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னின் பிறந்த நாள் கொண்டாடப்படும். மறுநாள் நவம்பர் 27ஆம் திகதி, மாவீரர் நாள் உணர்வெழுச்சி யுடன் கடைப்பிடிக்கப்படும்.

மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரை முடிவடையும் தருணம், மாலை 6.05 மணிக்கு ஆலய மணி ஒலிக்க விடப்பட்டு, மாவீரர்களுக்கான நினைவுப்பாடலுடன் ஈகச்சுடரேற்றல் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. மனித உரிமை அதிகாரிகள் ஜனவரியில் இலங்கை வருகின்றனர்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தகவல்

எதிர்வரும் ஜனவரி மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் இவ்வாறு இலங்கை விஜயம் செய்ய உள்ளனர். குறித்த அதிகாரிகள் நாட்டின் எந்தவொரு பாகத்துக்கும் விஜயம் செய்ய அனுமதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் முறைமையுடன் இணைந்து செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு சிவில் சமூகங்களுடனும் அரசாங்கம் இணைந்து செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



சிவில் சமூக அமைப்புக்களுடன் சந்திப்பு ஒன்றை நடாத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெண்ணொருவர்மீது கத்திக் குத்து; முன்னாள் இராணுவச்சிப்பாய் கைது

அங்கொடை சந்திக்கு அருகில் பெண்ணொருவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரை முல்லேரியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது பெண்ணே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கொடை சந்திக்கு அருகில், பொதுமக்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே சந்தேகநபர் குறித்த பெண்ணைக் கூரிய கத்தியால் குத்தியுள்ளார்.

இதையடுத்து அந்த நபர் தப்பிச்செல்ல முயன்ற நிலையில், பொதுமக்களின் உதவியுடன் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் நாவலர் குருபூசை

வவுனியாத் தமிழ்ச் சங்கமும் ஆதி விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெரு மானின் குருபூசை இன்று சனிக்கிழமை, கார்த்திகை மகத்தில் ஆதிவிநாயகர் ஆலய வசந்த மண்டபத்தில் மாலை 5.30மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாவலர் திருவுருவ வழிபாட்டை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் நிகழ்த்த திருமுறை ஓதப்படும்.

வரவேற்புரையை ஆலயத்தின் செயலாளர் தே.அமுதராஜ் வழங்குவார். தலைமையுரையைத் தொடர்ந்து இடம்பெறும் சிறப்புரைகளில் 'நலம் பெருக்கிய நாவலர்' என்றபொருளில் சிவத்தமிழ்ச் செல்வர் சிவ.கஜேந்திரகுமாரும் 'நாவலர் நற்பணிகள்' என்ற பொருளில் சைவமணி செல்வ. சண்முகமும் உரையாற்றுவார்கள்.

# நீர் நிலைகளை நாடுவதில் அவதானம் வவுனியா நகரசபைத் தலைவர் கோரிக்கை

வவுனியாவில் தொடர்ச்சியான மழை காரணமாக நீர் நிலைகள் நிரம்பிக் காணப்படும் நிலையில் வவுனியா மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்பதுடன் குளப்பகுதியில் உள்ள பூங்காவில் படகு சவாரி உட்பட நீர் நிலை விளையாட்டுக்களில் ஈடுபடுவதிலும் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வவுனியா நகரசபைத் தலைவர் தேசபந்து இ. கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் மழை காரணமாக நீர் நிலைகள் நிரம்பியுள்ள நிலையில் குளப்பகுதியில் அமைந்துள்ள நகரசபை பூங்கா திறக்கப்பட்டுள்ளதா என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

வவுனியா குளப்பகுதியில் அமைந்துள்ள பூங்கா தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, இதனைத் தற்போதைய நிலையில் நகரசபை கண்காணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. முற்று முழுதாக ஒப்பந்தக்காரரே அதனைப் பராமரிக்கின்றார்.

எனவே அங்கு எவ்வாறான நிலை உள்ளது என்பது தொடர்பில் நகரசபை கண்காணிக்க முடியாது. இந்நிலையில் வவுனியா குளம் நீர் நிறைந்துள்ளதால் மக்களே அவதானமாகச் செயற்பட வேண்டும். நீர் நிலை விளையாட்டுக்கள், படகு சவாரி என்பவற்றில் மிக அவதானம் தேவை.

அத்துடன் வவுனியாவில் அனைத்து நீர் நிலைகளும் நிரம்பியுள்ளன என அனர்த்த முகாமைத்துவ பிரிவும் தெரிவித்துள்ளது. ஆகவே, மக்கள் அவ்வாறான நீர் நிலைகள் மற்றும் அதனோடு அண்டிய பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் தெரிவித்துள்ளார்.





## உணவுக்காக வீதியோரங்களில் படையெடுக்கும் குரங்குகள்!

*நாட்டில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை காரணமாக அவை உணவு தேடி வீதிகளை நோக்கி படையெடுத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*குறிப்பாக ரன்தெனிகல பிரதேசத்தில் குரங்குகள் அதிகம் காணப்படுகின்றன எனக் குறிப்பிடப்படுகின்றது.*

## எங்களுடன் போராட மீண்டும் வாருங்கள் மங்கள தொடர்பில் சந்திரிகா உருக்கம்

கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்த முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனது முகப்புத்தகத்தில் ஓர் உருக்கமான பதிவொன்றை இட்டுள்ளார்.

அவர் தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

"சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒவ்வொரு போராட்டத்திலும் நீங்கள் நிச்சயமாக உதவினீர்கள்.

சுதந்திரம், நேர்மையான ஆட்சி – அனைவரையும் ஒருங்கிணைக்கும், பன்முகத்தன்மையை மதிக்கும் நாடு, அரசியல்வாதிகளுக்காக இல்லாமல் மக்களைப்பற்றி சிந்திக்கும் ஆட்சி முறை என சகலவற்றினதும் அடையாளம் நீங்கள் தான்.



அநீதி, ஊழல் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிராக நிற்கும் அனைவரின் இதயங்களிலும் செயல்களிலும் நீங்கள் வாழ்வீர்கள். மோட்சம் அடைவதற்கு முன், நாங்கள் கண்ட கனவு ஒரு முக்கியமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கான போராட்டத்தில் எங்களுடன் சேர நீங்கள் மீண்டும் வாருங்கள்!' என்றும் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலை குறிஞ்சாங்கேணி களப்பு பகுதியில் பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்து ஆரம்பம்

பயணிகள் படகு கவிழ்ந்து பாடசாலைகள் மாணவர்கள் உள்ளடங்களாக 6 பேர் உயிரிழந்தமையையடுத்து குறிஞ்சாங்கேணி களப்பு பகுதியில் வியாழக்கிழமை முதல் பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் ஏற்பாட்டில் குறித்த பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை, கிண்ணியாவில் உள்ள குறிஞ்சங்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் வரை அப்பகுதி மக்கள் இந்தப் போக்குவரத்து முறையைப் பயன்படுத்த முடியும் என கடற்படை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கிழக்கு கடற்படை கட்டளை தளபதியின் மேற்பார்வையின் கீழ் ஒரே நேரத்தில் 25 பயணிகளை பாதுகாப்பாக ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும் இந்தப் படகு சேவையில் ஈடுபடவுள்ளது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2021 இல் வெளியிடப்பெற்றது.